வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 27.03.2025 வியாழக்கிழமை இதழ் : 88 பக்கங்கள் : 12







# இந்தியாவை நிராகரித்தால் இலங்கை வளர்ச்சி அடையாது

## சுட்டிக்காட்டுகிறார் முன்னாள் ஜனாதிபதி ரணில்



கொழும்பு, மார்ச் 27

**இலங்கையின் வளர்ச்சியில் இந்திய ஆதரவின் முக்கியத்துவத்தை வலியுறுத்திய முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, "புதுடில்லியின் உதவி நிராகரிக்கப்பட்டால் இலங்கை வளர்ச்சி அடையாது", என்று கூறியுள்ளார்.**

நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய ரணில் விக்கிரமசிங்க, "இந்தியாவின் ஆதரவு நிராகரிக்கப்பட்டால் இலங்கை வளர்ச்சி அடையாது. 2050ஆம் ஆண்டு இன்னும் ஏழ்மை நிலைக்கே தள்ளப்படும். இந்தியா நமது நெருங்கிய அயல் நாடு. அது அமெரிக்கா, ரஷ்யா அல்லது சீனா அல்ல. எனவே, இலங்கை செய்யவேண்டியது இந்த உறவை சிறப்பாக பயன்படுத்துவதாகும். இலங்கை தனது வேலையை இந்தியா மூலம் செய்யவேண்டும்.

"அந்த நேரத்தில் இலங்கை 430 கோடி அமெரிக்க டொலர்களைப் பெறவில்லை என்றால் நமது நாடு என்னவாக இருந்திருக்கும்?" என்று அவர் பொருளாதார நெருக்கடியை நினைவூட்டி கேள்வியும் எழுப்பினார்.

மேலும், "அதானி குழுமத்தின் முதலீட்டு முயற்சி இலங்கைக்கு மேலும் பல முதலீடுகளை 11

# ஏப்.3 முதல் வடக்கில் மழை; மீனவர்களுக்கும் எச்சரிக்கை!

யாழ்ப்பாணம், மார்ச் 27

வங்காள விரிகுடாவில் எதிர்வரும் ஏப்ரல் 3ஆம் திகதி காற்றழுத்த தாழ்வு நிலை உருவாக வாய்ப்புள்ளது. இதனால், ஏப்ரல் 3ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை வடக்கு, கிழக்கில் மிதமானது முதல் கனமானது வரை மழை கிடைக்க வாய்ப்புள்ளது - என்று காலநிலையாளரும் யாழ். பல்கலைக்கழக புவியியல் துறை தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான 11

# அறிந்த தகவலை வழங்குவது ஞானசார தேரரின் கடமை!

## அரசாங்கம் அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 27

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் அல்லது தேசிய பாதுகாப்பு தொடர்பில் முக்கிய தகவல்களை அறிந்திருந்தால் அவை தொடர்பில் புலனாய்வு பிரிவுக்கு அறிவிக்க வேண்டியது ஞானசார தேரரின் கடமை. அதனை விடுத்து செய்தியாளர் மாநாடுகளில் அவை தொடர்பில் கூறிக் கொண்டிருப்பது பொருத்தமற்றது - என்று அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ 11

# இழுவைமடி மீன்பிடியை படிப்படியாக நிறுத்துவோம்!

## தமிழ்நாடு மீனவர் பிரதிநிதிகள் உறுதிமொழி



- குமார கோகுலன் -

வவுனியா, மார்ச்27

இழுவைமடி மீன்பிடியை படிப்படியாக நிறுத்த முடியும். இந்திய - இலங்கை மீனவர்கள் மீன்பிடிக்க இரு நாட்டு அரசாங்கமும் பேசி தீர்வு காணவேண்டும் - இவ்வாறு தமிழ்நாடு விசைப்படகு மீனவ சங்கத்தின் தலைவர் பி. ஜேசுராஜா கோரிக்கை முன்வைத்துள்ளார்.

தமிழ்நாடு, இலங்கை மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் 11

# பிரிட்டனின் ஒருதலைப்பட்ச முடிவு நல்லிணக்க முயற்சியை பாதிக்கும்

## வெளிவிவகார அமைச்சு இப்படி விளக்கம்

கொழும்பு, மார்ச் 27

"சில தனிநபர்கள்மீது தடை விதிப்பதில் இங்கிலாந்து மற்றும் பிறநாடுகளின் ஒருதலைப்படசமான முடிவுகள் இலங்கையில் முன்னெடுக்கப்படும் நல்லிணக்க செயல்முறையை சிக்கலாக்கவே உதவும்" - இவ்வாறு வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கை படைகளின் மூன்று முன்னாள் தளபதிகள் கருணா என்று அறியப்பட்ட வி. முரளிதரன் ஆகியோருக்கு கடந்த திங்கட்கிழமை தடை விதித்தது பிரட்டன். இது தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாட்டை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் பிரிட்டன் 11

# மீனவர் பிரச்னை தீர்வுக்கு அரச மட்ட பேச்சு அவசியம்

## கடற்றொழிலாளர் இணையம்

- குமார. கோகுலன் -

வவுனியா, மார்ச் 27

இலங்கை - இந்திய மீனவர் பிரச்னை தீர்வுக்கு அரச மட்டத்தில் பேச்சுகளை முன்னெடுத்து நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டும் - என்று வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் ஊடக பேச்சாளர் அன்னராசா தெரிவித்தார்.

இலங்கை - இந்திய மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் நேற்றைய தினம் வவுனியாவில் சந்தித்து 11

# போரின்போது பரந்துபட்டளவில் மனித உரிமை மீறப்படவில்லை!

## பிரிட்டனின் குற்றச்சாட்டுகளை மறுக்கிறார் மகிந்த



### முன்னாள் படையினர் வெளிநாடுகளால் துன்புறுத்தப்படுகின்றனராம்

கொழும்பு, மார்ச் 27

"இராணுவ நடவடிக்கைகளின்போது பரந்துபட்டளவில் மனித உரிமைகள் மீறல் எவையும் இடம்பெறவில்லை. பிரிட்டன் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகளை நான் நிராகரிக்கிறேன்", என்று கூறியுள்ளார் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ.

அத்துடன், இலங்கையின் தேசிய பாதுகாப்பை பாதுகாப்பதற்காக வெளிநாட்டு அரசாங்கங்களால் அமைப்புகளால் துன்புறுத்தப்படும் முன்னாள் ஆயுதப் படையினரை தற்போதை அரசாங்கம் உறுதியாக பாதுகாக்கும் என்று தான் எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் படைத் தளபதிகள் மற்றும் கருணா ஆகியோருக்கு பிரிட்டன் கடந்த 11

# 16-17 வயது பிரிவினரிடையே மனநல பிரச்னைகள் உயர்வு!

## சுகாதார மேம்பாட்டு பணியகம் கவலை

கொழும்பு, மார்ச் 27

நாட்டில் 16 - 17 வயதுக்கு உட்பட்டவர்களில் 18 வீதத்தினர் மனச்சோர்வு உணர்வுகளை அனுபவித்து வருகின்றனர் என்று சுகாதார மேம்பாட்டு பணியகம் கவலை தெரிவித்துள்ளது.

கடந்த 12 மாதங்களில் பிள்ளைகளிடையே மனநல பிரச்னைகள் அதிகரித்துள்ளது. 22.4 வீதத்தினர் தனிமையை உணர்கிறார்கள் என்று 11

# வேட்புமனுக்கள் நிராகரிப்பு; உயர்நீதிமன்றில் வழக்குகள்!

கொழும்பு, மார்ச் 27

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக உயர் நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி, ஐக்கிய மக்கள் சக்தி கூட்டமைப்பு, சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய அரசியல் கட்சிகளின் சார்பில் இந்த 11

# திஸ்ஸ விகாரை விடயத்தில் அரசு நேர்மையாக உள்ளது!

## புத்தசாசன அமைச்சர் சொல்கிறார்

கொழும்பு, மார்ச் 27

தையிட்டி திஸ்ஸ விகாரை பிரச்னையை தீர்க்க அரசாங்கம் மிகவும் நேர்மையாக செயல்படுகிறது. ஆனால், சிலர் மத நல்லிணக்கத்துக்கு தீங்கு விளைவிக்க முயல்கின்றனர் - இவ்வாறு புத்தசாசனம், சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் 11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பல்கலை விஞ்ஞானபீட மாணவர்கள் கவனவீர்ப்பு!



யாழ்ப்பாணம், மார்ச் 27

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் இணை மருத்துவ விஞ்ஞான பீட மாணவர் சங்கத்தினர் நேற்று கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட முன்றலில் இருந்து யாழ்ப்பாணம் நகரம் வரை பேரணியில் அவர்கள் ஈடுபட முயன்றனர். பேரணியை பொலிஸார் தடுத்து நிறுத்தியிருந்த நிலையில் மாணவர்கள் திருநெல்வேலி சந்தியில் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

"இலவசக் கல்வியை பாதுகாக்க வேண்டும்", "இலவச கல்வியால் உருவாகும் அரச பல்கலைகளில் உள்ள அனைத்து இணை மருத்துவ விஞ்ஞான பட்டதாரிகளும் அரச தொழிலுக்கு உடனடியாக இணைக்கப்பட வேண்டும்", நியாயமான வேலைவாய்ப்பு "கொள்கையை உருவாக்குங்கள்", தற்காலிக பயிற்சி உடனடியாக வழங்கப்பட வேண்டும்", "இலவசக் கல்வியை அழித்து, தனியார் பல்கலைக்கழகங்களை ஊக்குவிக்கும் ஒழுங்கற்ற தேர்வு முறையை உடனடியாக இரத்து செய்யுங்கள்", "இலவசக் கல்வியால் உருவான இணை மருத்துவ விஞ்ஞான பட்டதாரிகளை தவிர்த்து, தனியார் பல்கலைக் கழகங்கள் மூலம் பட்டம் பெற்றவர்களை அரச தொழிலில் இணைப்பதற்கான சதித் திட்டத்தை உடனடியாக கைவிடுங்கள்", உள்ளிட்ட கோரிக்கைகளை போராட்டக்காரர்கள் வலியுறுத்தினர்.

உள்ளூராட்சி தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் பேரணிகள் மற்றும் ஊர்வலங்கள் நடத்துவதற்கு தேர்தல் சட்டத்தின்படி தடை செய்யப்பட்டுள்ள நிலையில், குறித்த போராட்டம் இடம்பெற்ற நிலையில் அங்கு யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பொலிஸ் நிலையங்களை சேர்ந்த பொலிஸார் அங்கு குவிக்கப்பட்டிருந்தனர். (ஐ)



# ஆசிரியர் கலாசாலையில் இப்தார் நிகழ்வு நடைபெற்றது!

யாழ்ப்பாணம், மார்ச் 27

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் இஸ்லாமிய மாணவர் மன்றம் முன்னெடுத்த இத்தார் விசேட நிகழ்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்கு நடைபெற்றது.

கலாசாலை அதிபர் சந்திர மௌலீசன் லலீசன் தலைமையில் நடந்த இந்நிகழ்வில் அதிதி பேச்சாளராக மௌலவி எம். வை. அப்துஸ்ஸத்தார் (ஹாஷிமி) கலந்து கொண்டார்.

நிகழ்வின் ஆரம்பத்தில் வணிகநெறி ஆசிரிய மாணவர் எம். எஸ். ஹீபத்துல்லா கிராத் ஓதினார்.

விசேட கல்வி ஆசிரிய மாணவி எஸ். எவ். நுஸ்லா வரவேற்புரை ஆற்றினார். இஸ்லாமிய மன்ற காப்பாளர் விரிவுரையாளர் சர்மிளா பாஸ்கரன் வாழ்த்துரை வழங்கினார். ஆரம்பக் கல்வி ஆசிரிய மாணவி ஏ. எம். எவ். பர்சானா நன்றியுரை ஆற்றினார்.

நிகழ்வின் நிறைவில் 6.28 மணிக்கு அதான் ஒலிக்க விடப்பட்டு - பஸ்னா பாயிஸ், றிஸ்மி பாயிஸ் , எம்.எஸ். உபைதுல்லா ஆகியோரின் அனுசரணையில் இப்தார் விருந்துபசாரம் நடைபெற்றது. (ஐ)

# கிளிநொச்சி மாவட்டத்தில் 3 சபைகளையும் வெல்வோம்!

## சிறீதரன் எம். பி. தெரிவிப்பு



கிளிநொச்சி, மார்ச் 27

நடைபெறவுள்ள உள்ளூராட்சி தேர்தலிலும் கிளிநொச்சி மாவட்டத்தில் மூன்று பிரதேச சபைகளையும் இலங்கை தமிழ் அரசு கட்சி கைப்பற்றும் - என்று சி. சிறீதரன் எம். பி. தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழ் அரசு கட்சி பூநகரி பிரதேச சபைக்கான வேட்புமனுவை பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தலைமையில் நேற்று புதன்கிழமை கிளிநொச்சி மாவட்ட செயலக தேர்தல் பணிமனையில் கையளித்தது.

இதைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன்,

"விடுதலை நோக்கிய பயணத்தில் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் என்பது ஒரு குட்டி அரசுக்கான முதன்மை தேர்தல். பூநகரி பிரதேச சபைக்கான பதினொரு வட்டாரங்களுக்கான வேட்பு மனுவை தாக்கல் செய்திருக்கிறோம்.

கடந்த தேர்தல்களிலும் பதினெரு வட்டாரங்களில் வெற்றி பெற்றிருக்கின்றோம். இம்முறையும் வெற்றி பெற்று கிளிநொச்சி மாவட்டத்தில் மூன்று சபைகளையும் கைப்பேற்றுவோம் - என்றார். (ஐ)

# வவுனியா சிறையிலுள்ள இந்திய மீனவர்களை சந்தித்த பிரதிநிதிகள்!

வவுனியா, மார்ச் 27

வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களை இந்திய மீனவர் சங்க பிரதிநிதிகள் பார்வையிட்டு, அவர்களுடன் உரையாடினர்.


வவுனியாவுக்கு வருகை தந்த இந்தியாவின் இராமேஸ்வரம் மாவட்டத்தின் இந்திய விசைப் படகு மீனவ சங்கத்தின் தலைவர் பி.ஜேசுராஜா, இராமேஸ்வரம் பாரம்பரிய விசைப் படகு மீனவ சங்கத்தை சேர்ந்த ஆல்வின் பெர்னாண்டோ, மண்டபம் விசைப்படகு மீனவர் சங்கத்தை சேர்ந்த இருதயராஜூ ஜஸ்ரின், தங்கச்சிமடம் விசைப்படகு மீனவர் சங்கத்தை சேர்ந்த ஜெருசிமான்ஸ், பாம்பன் விசைப்படகு மீனவர் சங்கத்தை சேர்ந்த ராஜப்பன் சகாயம் ஆகியோரே நேற்றைய தினம் சிறைக்கு சென்று மீனவர்களை சந்தித்தனர்.



எல்லை தாண்டியும், சட்டவிரோத முறைகளைப் பயன்படுத்தியும் மீன் பிடித்ததாக இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கமைய வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 40 வரையான இந்திய மீனவர்களை அவர்கள் பார்வையிட்டதுடன், அவர்களின் தற்போதைய நிலைமை தொடர்பாகவும் கேட்டறிந்தனர்.

வவுனியா சிறைச்சாலை அதிகாரிகள் குறித்த மீனவர்களை பார்வையிட இந்திய மீனவ சங்க பிரதிநிதிகளுக்கு விசேட ஏற்பாடுகளையும் செய்து கொடுத்திருந்தனர். (ஐ)

# புதிய சாளம்பைகுளத்தில் இப்தார் நிகழ்வு நடைபெற்றது



வவுனியா, மார்ச் 27

வவுனியா, புதிய சாளம்பைக் குளம், மஸ்ஜிதுல் அக்ஸா ஜீம்மா பள்ளியில் இப்தார் நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.

வவுனியா மாவட்ட ஜம்மியதுல் உலமா சபைத் தலைவர் அஷ்ஷேக் என். பி. ஜூனைத் மதனியின் பங்கேற்புடன் இந்த நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் புதிய சாளம்பைக்குளம் கிராமத்தை சேர்ந்த பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

# அதிக நீரை அருந்துங்கள்!

யாழ்ப்பாணம், மார்ச் 27

யாழ்ப்பாண குடாநாட்டில் வெப்பநிலை அதிகரித்துள்ள மையால் மக்கள் உடல் வெப் பத்தை தணிக்கக்கூடிய நீரா காரங்களை அதிகமாக அருந்த வேண்டும் என்று யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத் துவ மத்திய நிலைய உதவி பணிப்பாளர் என். சூரிய ராஜா அறிவுறுத்தியுள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். (ஐ)

# ஜ. த. தே. கூட்டணி வென்றாலே கனிய வளம் பாதுகாக்கப்படும்!

மன்னார், மார்ச் 27

மன்னார் தீவில் முன்னெடுக்கப்பட உள்ள கனிய மணல் அகழ்வை நிறுத்தி, கனிய வளங்களை பாதுகாக்க மக்கள் மன்னார் பிரதேச சபை தேர்தலில் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியை ஆதரித்து வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்று தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) மாவட்ட அமைப்பாளர் டானியல் வசந்தன் தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மன்னார் பிரதேச சபைக்கு வேட்புமனுவை தாக்கல் செய்த பின்னர் அவர் இவ்வாறு கூறினார்.

மேலும், எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மன்னார் பிரதேச சபைக்கான தேர்தல் முக்கியமானதாக அமைந்துள்ளது. மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் டைட்டானியம் எனப்படுகின்ற கனிய மணல் அகழ்வு செய்வதற்கு பல்வேறு கம்பெனிகள் போட்டி போட்டுக் கொண்டு இருக்கின்றது.

இத்தருணத்தில் மன்னார் பிரதேச சபையை ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி கைப் பற்றுமாக இருந்தால் கனிய வளங்கள் பாதுகாக்கப்படும். எனவே, மன்னார் பிரதேச மக்கள் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியை வெற்றி பெறச் செய்து கனிய வளங்களை பாதுகாக்க உறுதுணையாக இருங்கள் - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
27.03.2025 வியாழக்கிழமை
பிலவ வருடம், பங்குனி 13

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம் உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# பிரித்தானிய தடைகள்

இறுதிப் போரில் பங்குபற்றிய இராணுவ மற்றும் கடற்படை தளபதிகள் உள்ளடங்கலாக தமிழீழ விடுதலை புலிகள் இயக்கத்தின் கிழக்கு மாகாண தளபதியாக இருந்த விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) ஆகியோர் மீது பிரித்தானிய அரசு தடை விதித்துள்ளது. இவர்களும் இவர்களின் குடும்ப உறுப்பினர்களும் பிரித்தானியாவுக்குள் நுழைய முடியாது. இவர்களில் ஒருவரான படைகளின் முன்னாள் பிரதானியான ஜெனரல் சவேந்திர சில்வாமீது ஏற்கனவே அமெரிக்கா தடை விதித்துள்ள நிலையிலேயே பிரித்தானியா தற்போது தடை விதித்திருக்கிறது. இவ்வாறான தடைகளை ஐரோப்பிய ஒன்றியம்கூட எதிர்காலத்தில் மேற்கொள்ளலாம்.

இவ்வாறு தடை விதிக்கப்பட்ட அனைவருமே முன்னாள் ஆட்சியாளர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நெருக்கமானவர்கள். இதில், குறிப்பாக இலங்கையின் இராணுவத் தளபதியாக இருந்த சவேந்திர சில்வா, ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க இருந்த காலத்திலும் பதவியில் இருந்தவர். எதிர்காலத்தில் அரசியல் பிரவேசம் செய்யும் நோக்குடன் செயல்பட்டு வருபவர். அவர் எதிர்காலத்தில் ஜனாதிபதி வேட்பாளராக வந்தாலும் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் முதலாவது ஆட்சிக் காலத்தில் சவேந்திர சில்வாமீதான தடையை அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அறிவித்திருந்தது. ஆனால், சவேந்திர சில்வா பதவியில் இருக்கும் வரையில் அமைதியாக இருந்துவிட்டு, அவர் ஓய்வு பெற்றிருக்கும் நிலையில் பிரித்தானியா தடையை அறிவித்திருக்கிறது. இது ஒரு வகையில் கோடம்பாக்க தமிழ் படங்களில் வரும் பொலிஸார் போன்றது. அதாவது, எல்லாம் நடந்து முடிந்த பின்னர் பொலிஸார் அவ்விடத்துக்கு வந்து விசாரிப்பார்கள். பார்ப்பதற்கு நகைச்சுவையாக இருக்கும்.

இவ்வாறான மேற்குலக தடைகளால் புலம்பெயர் சமூகத்தை சேர்ந்த ஒரு சிலர் மகிழ்ச்சியடையலாம் - தமிழ் அரசு கட்சியின் அரசியல்வாதிகளும் மகிழ்ச்சியை வெளிக்காட்டலாம் - அதற்குமப்பால் தங்களுடைய இராஜதந்திர நடவடிக்கைகளால்தான் இவ்வாறான தடை உத்தரவுகளை மேற்குலகம் வழங்குவதாகவும் அவர்கள் பொய்யாக பிரசாரம் செய்யலாம். ஆனால், உண்மையில் இவர்களுடைய அரசியல் நடவடிக்கைகளுக்கும் இவ்வாறான தடை உத்தரவுகளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை.

இதிலுள்ள ஆச்சரியம் என்னவென்றால், இறுதி யுத்தத்தின்போது 58ஆவது படைப் பிரிவின் கட்டளை தளபதியாக இருந்த சவேந்திர சில்வா பின்னர், மகிந்த ராஜபக்ஷ காலத்தில் ஐக்கிய நாடுகள் சபைக்கான நிரந்தர உபவதிவிடப் பிரதிநிதியாகவும் இருந்திருக்கிறார். அப்போதெல்லாம் இவ்வாறானவர்கள் சுதந்திரமாக செயல்படுவதற்கான செங்கம்பளத்தை விரித்துவிட்டு, அவர்கள் பதவியிலிருந்து ஓய்வு பெற்றதும் அவர்கள்மீது தடை உத்தரவுகளை பிறப்பிப்பதானது - இவ்வாறானவர்கள் தென்னிலங்கையில் சிங்கள தேசியவாதிகள் மத்தியில் கதாநாயகர்களாக கொண்டாடப்படுவதற்கான சூழலையே கனியச் செய்கிறது. அதேவேளை பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதியை நிலைநாட்டுவதிலும் இவ்வாறான தடைகள் எவ்வித செல்வாக்கையும் செலுத்தவில்லை. ஏனெனில், இதுவரையில் இலங்கைமீதான இவ்வாறான அழுத்தங்களால் அரசாங்கம் கீழிறங்கி வரவில்லை.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் பிரித்தானிய தீர்மானத்தை எதிர்த்திருப்பதுடன், இது ஒருதலைப்பட்சமான முடிவு என்று தெரிவித்திருக்கிறது. கடந்த பதினைந்து வருடங்களாக இலங்கையை ஆட்சி செய்த அரசாங்கங்கள் அனைத்துமே ஒரு விடயத்தில் கொள்கைரீதியான உடன்பாட்டையே கொண்டிருந்தன - கொண்டிருக்கின்றன என்பதையே தேசிய மக்கள் சக்தியின் கருத்து வெளிப்படுத்துகிறது. மகிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷமீதும் கனடா தடை விதித்திருக்கிறது. அதனால் என்ன நடந்தது? அவர்கள் தனிப்பட்ட ரீதியில் கனடாவுக்கு செல்ல முடியாததைத் தவிர, பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் வாழ்வில் இவ்வாறான தடைகள் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறன? மாறாக, தென்னிலங்கையில் அவர்கள் தொடர்ந்தும் கதாநாயகர்களாகவே வலம் வந்து கொண்டிருக்கின்றனர்.

## விபத்தில் காயமடைந்த முதியவர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 27

ஊர்காவற்றுறை பாலக்காடு பகுதியில் இடம்பெற்ற விபத்தில் காயமடைந்த வயோதிபர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். விபத்துத் தொடர்பில் பஸ்ஸின் சாரதி கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த சனிக்கிழமை இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் ஒன்றும் மோட்டார் சைக்கிளொன்றும் மோதி விபத்துக்குள்ளானது.

விபத்தில் பலத்த காயமடைந்த மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். புளியங்கூடல் தெற்கு ஊர்காவற்றுறை பகுதியைச் சேர்ந்த 82 வயதான முதியவர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார்.

சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டதுடன் மேலதிக விசாரணைகளை ஊர்காவற்துறை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ஐ)

## யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர் மட்டக்களப்பில் சடலமாக மீட்பு!

மட்டக்களப்பு, மார்ச் 27

மாமாங்கம் பகுதியில் வீடொன்றிலிருந்து நேற்று புதன்கிழமை ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார் என்று மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் மானிப்பாயைச் சேர்ந்த 71 வயது நபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார். இவர், ஒரு மாதத்துக்கு முன்னர் அவுஸ்திரேலியாவிலிருந்து வந்து மாமாங்கத்தில் உள்ள வீடு ஒன்றில் தங்கியிருந்தார்.

இந்த நிலையில், நேற்று முன்தினம் இரவு நித்திரைக்கு சென்ற அவர் மறுநாள் சடலமாக மீட்கப்பட்டார்.

அவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## வவுனியாவில் கிணற்றில் பெண்ணின் சடலம் மீட்பு

வவுனியா, மார்ச் 27

வவுனியாவில் கிணற்றிலிருந்து இளம் பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது.

கலாபோகஸ்வேவ பகுதியிலிலுள்ள கிணற்றிலேயே பெண்ணின் சடலம் நேற்று முன்தினம் மீட்கப்பட்டது. ஊர் மக்கள் பொலிசாருக்கு தகவல் வழங்கியதன் அடிப்படையில் இந்த சடலம் மீட்கப்பட்டது.

திடீர் மரண விசாரணை அதிகாரி க. ஹரிபிரசாத் சம்பவ இடத்துக்கு சென்று விசாரணைகளை நடத்தியிருந்தார்.

மீட்கப்பட்ட உடற்கூற்று பரிசோதனைக்காக சடலம் வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ஐ-10)

## தந்தை செல்வாவின் 127ஆவது பிறந்ததினம்!

கிளிநொச்சி, மார்ச் 27

தந்தை செல்வா என்று அழைக்கப்பட்ட எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் 127 வது ஜெயந்தி நிகழ்வு கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது என்று தந்தை செல்வநாயகம் அறக்கட்டளையின் அறங்காவலர் இராசையா பேரின்பநாயகம் தெரிவித்தார்.

நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

தந்தை செல்வாவின் 127ஆவது ஜெயந்தி தினம் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது. இதில், விருந்தினர்களாக யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணைத் தூதுவர் சாய் முரளி, முன்னாள் துணைத் தூதுவர் ஆர். நடராஜன், கிளிநொச்சி மாவட்ட மேதிக அரச அதிபர் எஸ். முரளிதரன் ஆகியோர் பங்கேற்பர். (ஐ)

## வெள்ளவத்தை கடல் பகுதியில் மீண்டும் முதலைகள் நடமாட்டம்!

கொழும்பு, மார்ச் 27


வெள்ளவத்தை - கல்கிஸை, பாணந்துறை கடற்பகுதிகளில் மீண்டும் முதலைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது. இதனால் பொது மக்களை அவதானத்துடன் செயற்படுமாறு இலங்கை உயிர் காப்பு சங்கம் அறிவுறுத்தியுள்ளது.

அத்துடன், முதலைகளால் ஏற்படக் கூடிய பாதிப்பை தவிர்ப்பதற்கு அதிகாரிகள் விரை வான நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியத்தை சங்கத்தின் தலைமை நிர்வாக அதிகாரி வலியுறுத்தினார்.

மேலும், இந்த விடயம் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக சங்கத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி அசங்க நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இந்தக் கடலோரப் பகுதிகளைப் பயன்படுத்தும் போது பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் எனவும் அவர் அறிவுறுத்தியுள்ளார். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்குனி - 27 வியாழக்கிழமை
குரோதி வருடம் - பங்குனி 13
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : திரயோதசி




**மேடம்**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். உறவினர் நண்பர்கள் எதிர்பார்ப்புடன் பேசுவார்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும்.

**இடபம்**
கணவன்- மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். உடல் நிலை சீராகும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். புத்துணர்ச்சி பெருகும்.

**மிதுனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் ஒரு விஷயத்தை நினைத்து அதிகளவில் குழப்பம் அடைவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களை உதாசீனப்படுத்த வேண்டாம். நிதானம் தேவைப்படும் நாள்.

**கடகம்**
சகோதர வகையில் நன்மை உண்டு. விலை உயர்ந்த ஆபரணம் வாங்குவீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் தலைமையின் ஆதரவு கிட்டும்.

**சிம்மம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள்.

**கன்னி**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். பிள்ளைகளின் தனித்திறமைகளை கண்டறிவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் ஆலோசனை ஏற்கப்படும். கனவு நனவாகும் நாள்.

**துலாம்**
கடந்த கால இனிய அனுபவங்களை நினைவுக் கூர்ந்து மகிழ்வீர்கள். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளைத் தாண்டி முன்னேறுவீர்கள். எதிர்பாராத நன்மைகள் உண்டாகும் நாள்.

**விருச்சிகம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். வியாபாரம் செழிக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள்.

**தனுசு**
குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். சில வேலைகளை விட்டுக் கொடுத்து முடிப்பீர்கள். வியாபாரத்தில் திடீர் லாபம் உண்டு. உத்தியோகத்தில் மேலதிகாரி ஒத்துழைப்பார்.

**மகரம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் சந்தேகப்படுவதை முதலில் நிறுத்துங்கள். வியாபாரத்தில் இழப்புகள் ஏற்படும். உத்தியோகத்தில் மறைமுக அவமானம் வந்து நீங்கும். பொறுமைத் தேவைப்படும் நாள்.

**கும்பம்**
அனாவசிய செலவுகளை குறைக்கப்பாருங்கள். திடீர் பயணங்கள் இருக்கும். வியாபாரத்தில் பழைய பாக்கிகளை போராடி வசூலிப்பீர்கள். வேலைச் சுமையால் சோர்வு அடைவீர்கள்.

**மீனம்**
எதார்த்தமாக பேசிக் கவர்வீர்கள். அரசால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் விஐபிகள் வாடிக்கையாளர் ஆவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். புகழ் கௌரவம் கூடும்.

# அதிகரிக்கப்பட்ட 15 வீத வரியை இப்போது செலுத்த வேண்டாம்!

## தேர்தலின் பின்னர் குறையும் என்கிறது தேசிய மக்கள் சக்தி

வவுனியா, மார்ச் 27

வவுனியா மாநகர சபையின் 15 வீதத்தால் அதிகரித்த தற்போதைய சோலை வரியை தற்போது செலுத்த தேவையில்லை. புதிய சபை அமைந்த பின்னர் அதன் தீர்மானத்துக்கு அமைய செலுத்த முடியும் என்று தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செ. திலகநாதன் தெரிவித்துள்ளார்.

வவுனியா - குருமண்காட்டிலுள்ள அவரின் பணிமனையில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், கடந்த சில நாட்களாக வவுனியா மாநகர சபைக்கு உட்பட்ட பிரதேசத்தில் பெரும் பிரச்னை ஒன்று ஏற்பட்டுள்ளது. மாநகர சபைக்கு உட்பட்ட பகுதியில் வாழும் மக்களின் சோலை வரியானது கடந்த காலத்தில் அறவிடப்பட்ட தொகையைவிட அண்ணளவாக 7 மடங்கு அதிககரித்து மாநகரசபை உத்தியோகத்தர்களால் சிட்டைகள் வழங்கப்படுகின்றன.

இது தொடர்பில் மாநகர சபை செயலாளரிடம் கேட்டபோது, கடந்த 15 வருடமாக சொத்து மதிப்பீடு நடைபெறவில்லை எனவும் கடந்த வருட இறுதியில் சொத்து மதிப்பீடு நடத்தப்பட்டதன் அடிப்படையிலேயே இந்த வரி அதிகரிப்பு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

ஆனால், யாழ்ப்பாணம், கொழும்பு, கம்பகா, களுத்துறை ஆகிய மாவட்டங்களில் இந்த வரி வீதம் குறைவாக காணப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் 5 வீதமாக காணப்படுகிறது. அவ்வாறு உள்ளபோது வவுனியா மாநகர சபையில் 15 வீதமான வரி அறவீடு என்பது மக்களின் தலையில் பெரும் சுமையை ஏற்படுத்துவதாக உள்ளது.

இது தொடர்பில் வடக்கு ஆளுநருடன் உரையாடிய போது, "வருகின்ற மாநகர சபைத் தேர்தலின் பின்னர் உறுப்பினர்களின் தீர்மானத்துக்கு அமைய வரி வீதம் தீர்மானிக்க முடியும்", என்று கூறினார்.

எனவே, மே 6இல் நடைபெறவுள்ள மாநகர சபை தேர்தலில் வெற்றிபெறும் கட்சியின் அடிப்படையில்தான் வரிவீதம் அமையும். அதுவரை மக்கள் புதிய வரியை கட்டத் தேவையில்லை. புதிய உறுப்பினர்கள் வருகை தந்த பின் சபையால் அது தீர்மானிக்கப்படும். எமது கட்சி ஆட்சிக்கு வந்தால் அதிக வரி விதிக்கப்படமாட்டாது -என்றார். (ஐ)

# வேட்புமனு நிராகரிப்புக்கு எதிராக த. ம. கூட்டணி உயர்நீதிமன்றில் மனு!

கொழும்பு, மார்ச் 27

யாழ்ப்பாணம் மாநகர சபை உள்ளிட்ட உள்ளூராட்சி சபைகளில் போட்டியிடுவதற்கான வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் தமிழ் மக்கள் கூட்டணி வழக்கு தொடர்ந்துள்ளது.

உள்ளூராட்சி சபைகளுக்கான வேட்புமனு தாக்கல் கடந்த 20ஆம் திகதியுடன் நிறைவடைந்தது. இந்த நிலையில், தமிழ் மக்கள் கூட்டணி உட்பட பல கட்சிகள் தாக்கல் செய்த வேட்புமனுக்கள் காரணம் குறிப்பிடப்பட்டு நிராகரிக்கப்பட்டன.

இந்த நிலையில் தமது வேட்புமனு நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக நேற்று முன்தினம் ஜனாதிபதி சட்டத்தரணி ஜெப்ரி அழகரட்ணம் ஊடாக அந்தக் கட்சி உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளது.

தமிழ் மக்கள் கூட்டணி யாழ்ப்பாணம் மாநகர சபையில் முன்னாள் முதல்வர் வி. மணிவண்ணன் தலைமையில் வேட்பாளர்களை களமிறக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வேட்புமனு நிராகரிப்புக்கு எதிராக உயர்நீதிமன்றம் செல்லவுள்ளோம்

## சித்தார்த்தன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 27

யாழ்ப்பாணத்தில் எல்லா சபைகளிலும் வெல்லக்கூடிய வெற்றி வாய்ப்புகள் இம்முறை ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணிக்கு உள்ள நிலையில் சில சபைகளின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. அவற்றுக்கு எதிராக உச்ச நீதிமன்றில் வழக்கு தொடரவுள்ளோம் என்று ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் இணைத்தலைவர் த. சித்தார்த்தன் தெரிவித் தார்.

நேற்று முன்தினம் அவர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், பிரதேச சபை தேர்தல் என்பது கிராம மட்டத்திலேயே உள்ள விடயங்களை கையாள்வதற்கு உரிய தேர்தலாகும். எனவே, மக்கள் கிராமத்திலே செல்வாக்கு உள்ளவர்களுக்கே வாக்களிப்பார்கள். இது நிச்சயமாக ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணிக்கு மக்கள் வாக்களித்து அமோக வெற்றி அடைய செய்வார்கள் என எதிர்பார்க்கிறோம்.

இந்த நிலையில் எமது வேட்பு மனுக்கள் 9 சபைகளில் நிராகரிக்கப்பட்டுள்ளன. அவற்றுக்கு எதிராக உச்ச நீதிமன்றில் வழக்கு தொடர்வோம் - என்றும் கூறினார். (ஐ)

# "வடக்கின் அபிவிருத்திக்கு இரு திணைக்களங்கள் தடை"

யாழ்ப்பாணம், மார்ச் 27

வடக்கு மாகாணத்தில் மீள்குடியமர்வு, அபிவிருத்தி, விவசாயம், சுற்றுலாத்துறை என எந்தவொரு விடயத்தையும் மேற்கொள்ள முடியாதளவுக்கு வனவளத் திணைக்களம் மற்றும் வன உயிரிகள் திணைக்களம் என்பன வற்றால் முட்டுக்கட்டைகள் தொடர்ச்சியாகப் போடப்படுகின்றன என்று வடக்கு மாகாண ஆளுநர் விசனம் வெளியிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் நடந்த யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு விசனம் தெரிவித்திருந்தார். அதன்போது வடக்கு மாகாணி ஆணையாளர் நாயகத்திடம் இது தொடர்பில் முறையிட்ட நிலையில், அவர் இந்த விடயத்தை விவசாய, கால்நடை, காணி மற்றும் நீர்பாசன அமைச்சரின் கவனத்துக்கு கொண்டு சென்றுள்ளதாகவும் அதற்கு அமைவாக எதிர்வரும் 9ஆம் திகதி பாராளுமன்றத்தில் உயர்மட்ட குழுக் கலந்துரையாடலுக்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகவும் ஆளுநர் குறிப்பிட்டார்.

வனவளத் திணைக்களம் மற்றும் வன உயிரிகள் திணைக்களம் என்பவற்றால் ஒவ்வொரு மாவட்டத்திலும் விவசாய நிலங்கள், மேய்ச்சல் தரவைகள், குளங்கள், வயல்கள், மக்கள் மீள்குடியமர்வுக்கான காணிகள் என்பன எவ்வளவு ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன என்பது தொடர்பில் மாவட்ட ரீதியாக விவரங்களை தயாரிக்குமாறு ஆளுநர் அறிவுறுத்தினார்.

இதேநேரம், இந்தத் திணைக்களங்களின் பாகுபாடான செயல்பாடுகள் தொடர்பிலோ அல்லது அந்தத் திணைக்களங்களின் நடவடிக்கைகள் தொடர்பிலோ வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த அதிகாரிகள் கேள்வி எழுப்பினால், மேற்படி இரண்டு திணைக்களங்களின் உயர் அதிகாரிகளால் அவமரியாதை செய்யப்படுவதாகவும் இதன்போது ஆளுநருக்கு சுட்டிக்காட்டப்பட்டது. (ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தேசிய பொறிமுறை செயல்படாவிடின் நாட்டுக்கு எதிராகவும் தடை வரலாம்!

### பிரதீபா மஹநாமஹேவா எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 27

தேசிய பொறிமுறையை செயல்படுத்தாவிட்டால் எதிர்காலத்தில் நாட்டுக்கு எதிராகவும் தடைகள் விதிக்கப்படக்கூடும் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளரும், அரசியல் ஆய்வாளருமான கலாநிதி பிரதீபா மஹநாமஹேவா எச்சரித்துள்ளார்.

"இலங்கையின் முன்னாள் இராணுவத் தளபதிகள் இருவர், கடற்படை தளபதியொருவர் மற்றும் புலிகள் அமைப்பில் இருந்த கருணா அம்மான் ஆகியோருக்கு பிரிட்டன் தடை விதித்துள்ளது.

எமது நாட்டின் 58 படையினருக்கு எதிராக அமெரிக்கா தடை விதித்துள்ளது. அவர்களுக்கு அமெரிக்காவில் விஸா வழங்கப்படமாட்டாது என்பதுடன், அந்த நாட்டிலுள்ள சொத்துகள் முடக்கப்படும். இதேவழியில்தான் பிரிட்டனும் தற்போது தடை விதித்துள்ளது.

இவ்வாறு தொடர்ச்சியாக தனி நபர்களுக்கு எதிராக தடைகளை விதிக்கப்பட்டு, எதிர்காலத்தில் நாட்டுக்கு எதிராகவும் விதிக்கப்படக்கூடும்.

தடைகள் வருவதற்குரிய சூழ்நிலைகள் எம்மால்தான் உருவாக்கிக் கொடுக்கப்பட்டுள்ளன. ஏனெனில் உள்ளக பொறிமுறையிலுள்ள பரிந்துரைகள் அமுலாக்கப்படவில்லை. 2015 இல் தேசிய



சமத்துவம் தொடர்பில் குழுவொன்று நியமிக்கப்பட்டது. அந்த குழுவின் பரிந்துரைகள் இதுவரையில் அமுல்படுத்தப்படவில்லை.

பரணகம ஆணைக்குழு உட்பட உள்நாட்டில் பல குழுக்கள் செயல்பட்டுள்ளன. எனினும், மேற்படி ஆணைக்குழுக்களால் வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகள் அமுல்படுத்தப்படவில்லை. - என்றார். (அ)

# ரிஷாத் பதியுதீனுடன் அமெ. தூதுவர் சந்திப்பு!

கொழும்பு, மார்ச் 27

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன், இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்கை நேற்று கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது, சமகால அரசியல் விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடியதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது-இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவருடன், எமது நீண்டகால தொடர்புகள் மற்றும் நிலைபேறான தன்மை குறித்து ஆக்கபூர்வமான கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

இதன்போது, புனித ரமழான் மாதத்தில், காஸா மக்கள் எதிர்கொண்டுள்ள பெரும் துயரங்கள் மற்றும் உயிரிழப்புக்கள் தொடர்பிலும் எமது ஆழ்ந்த கவலையை தூதுவரிடம் வெளிப்படுத்தினோம்.

மேலும், மனிதாபிமான விடயங்களை முன்னிறுத்தியும் உலக அமைதிக்காகவும் அமெரிக்கா தனது ஆதரவினை வழங்கவேண்டும்" எனவும் அவர் வலியுறுத்தியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

# அரச சேவையில் சம்பள திருத்தம்!

கொழும்பு, மார்ச் 27

2025 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் அரச சேவையின் சம்பளத்தைத் திருத்தம் செய்வதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.



அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்றது. இதன் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-2025 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் அரச சேவையின் சம்பளத்தைத் திருத்தம் செய்வதற்காக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனையின் அடிப்படையில் 2025.04.01 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

திருத்தப்பட்ட சம்பள அளவுத்திட்டத்துக்கமைய சம்பளக் கொடுப்பனவுக்கான ஏற்பாடுகள் உள்ளடங்கிய சுற்றறிக்கையின் மூலமான ஆலோசனைகளை வெளியிடுதல் தொடர்பான நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக ஜனாதிபதி பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் அவர்களும் சமர்ப்பித்துள்ள யோசனையைக் கருத்தில் கொண்டு, அமைச்சரவைத் தீர்மானங்களை மேற்கொண்டுள்ளது.

அரச சேவையின் சம்பளத் திருத்தத்திற்கு ஏற்புடைய அனைத்து அமைச்சின் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களுக்கு சுற்றறிக்கை மூலமான ஆலோசனை வழங்குவதற்காக பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

அரசகூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் மற்றும் அரசிற்கு சொந்தமான கம்பனிகள் மற்றும் ஏற்புடைய நிறுவனங்களுக்கான சுற்றறிக்கை ஆலோசனையை வழங்குவதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளருக்கு அதிகாரம் வழங்கவும் அமைச்சரவையால் தீர்மானிக்கப்பட்டுள்ளது - என்றார். (அ)

# தோட்டாவுடன் சிப்பாய் கைது

கொழும்பு, மார்ச் 27

தனது பையில் துப்பாக்கி தோட்டாவை மறைத்து வைத்துக் கொண்டு ஜனாதிபதி செயலகத்திற்குள் நுழைய முயன்ற இராணுவச் சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் இராணுவ சிப்பாய், சமிக்ஞை படையணியில் இணைக்கப்பட்ட ஒரு சிப்பாய் என பொலிஸார் கூறுகின்றனர்.

சந்தேக நபரான சிப்பாய், ஜனாதிபதி செயலகத்தில் கடமையாற்றுகின்ற நிலையில் கடந்த 20 ஆம் திகதி, அவர் விடுமுறை பெற்று லுனுகம் வெஹெரவில் உள்ள தனது இல்லத்துக்கு சென்று திரும்பி வந்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தின் பொது நுழைவாயிலுக்கு அருகில் வைத்து ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகளால் குறித்த சிப்பாயின் பையை ஸ்கானர் பயன்படுத்தி சோதனையிட்ட போது பையில் ரி-56 துப்பாக்கி தோட்டா கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (அ)

### போலி கனேடிய வீஸா மோசடி:

# ஒன்பது பேர் அடங்கிய குழு விமான நிலையத்தில் கைது!

கொழும்பு, மார்ச் 27

போலியான கனேடிய விஸாக்களுடன் கட்டுநாயக்க விமான நிலையத்தில் ஒன்பது இலங்கையர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது போலி விஸா ஆவணங்கள் தொடர்பாக விமான நிலையத்தில் கைது செய்யப்பட்ட மிகப்பெரிய குழுவாகும்.

கட்டுநாயக்க விமான நிலைய குடிவரவு அதிகாரிகள் நேற்று முன் தினம் மாலை ஒரு சந்தேக நபரின் பயண ஆவணங்கள் குறித்து சந்தேகம் எழுப்பியதைத் தொடர்ந்து சந்தேக நபர்களைக் கைது செய்தனர்.

தொழில்நுட்ப சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் பயணியின் கனேடிய தொழில் விஸா போலியானது என்று கண்டறியப்பட்டது.

அதே நேரத்தில் அவரது கடவுச்சீட்டு உண்மையானது என்று கண்டறியப்பட்டது.

சந்தேக நபரை மேலும் விசாரித்ததில், இதேபோன்ற போலி விஸாக்களுடன் மேலும் எட்டுப் பயணிகள் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் டுபாய்க்கு புறப்படுவதற்காக புறப்படும் முனையத்தில் காத்திருந்தனர்.

30 முதல் 40 வயதுக்குட்பட்ட சந்தேக நபர்கள் போலியான கனேடிய விஸாவைப் பெறுவதற்காக தலா 4.5 மில்லியன் ரூபாவைச் செலவிட்டதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர்கள் தங்கள் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்ட ஒரு நபர், அவர்கள் புறப்படுவதற்கு ஒரு நாள் முன்பு நீர்கொழும்பில் உள்ள ஒரு ஹோட்டலில் தங்கியிருந்ததாகவும், விமான நிலையத்தில் அவர்களை இறக்கிவிட்டதாகவும் தெரிவித்தனர்.

போலி விஸாக்களுக்காக மில்லியன் கணக்கில் பணம் வசூலித்ததாகக் கூறப்படும் ஒருங்கிணைப்பாளர், குற்றப் புலனாய்வுத் துறை அதிகாரிகள் நடத்திய சோதனையைத் தொடர்ந்து, நீர்கொழும்பு ஹோட்டலில் கைது செய்யப்பட்டார்.

இவ்வாறு கைதானவர் கனடாவில் நிரந்தரமாக வசிப்பவர் என்றும், உள்ளூர் முகவர் மூலம் செயல்பட்டவர் என்றும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (அ)

# விசேட கற்கைகளுக்கான அனுமதிகளுக்கு இனி நாடளாவிய ரீதியில் பொதுப் பரீட்சை!

கொழும்பு, மார்ச் 27

இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களின் நுண்கலை மற்றும் குறிப்பிட்ட சில சிறப்பு பட்டப்படிப்பு அனுமதிக்குத் தேவையான பொது உளச்சார்பு மற்றும் செயன்முறைப் பரீட்சைகளுக்காக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நாடளாவிய ரீதியில் பொதுமைப்படுத்தப்பட்ட பரீட்சையை அறிமுகப்படுத்த உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை காலமும் அந்தந்தப் பல்கலைக்கழகங்கள் தனித்தனியாக மேற்கொண்டு வந்த இந்தத் தெரிவுப் பரீட்சைகளை இனி பரீட்சைகள் திணைக்களம் நடத்தும் வாய்ப்பு உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மாற்றம் குறித்த முக்கியமான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதியன்று நடைபெறவுள்ளது.

இதுவரை, நுண்கலை, மொழிபெயர்ப்பு கற்கைகள், விளையாட்டு விஞ்ஞானம், உடற்கல்வி போன்ற பாடப் பிரிவுகளுக்காக ஒவ்வொரு பல்கலைக்கழகமும் தனித்தனியாக பொது உளச்சார்பு மற்றும் செயன்முறைப் பரீட்சைகளை நடாத்தி வந்தன. ஆனால், நாடாளுமன்றத்தின் பொது நிறுவனங்களுக்கான குழுவின் (கோப்) பரிந்துரைகள் மற்றும் முறைப்பாடுகளின் காரணமாக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பொது முறைமையைப் பின்பற்றத் திட்டமிட்டுள்ளது.

இந்த மாற்றத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதியன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அலுவலகத்தில் உயர் மட்ட கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது. இந்தக் கலந்துரையாடலில் பரீட்சைகள் திணைக்கள ஆணையாளர் நாயகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அதிகாரிகள், பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள் ஆகியோர் பங்கேற்று, பரீட்சைகள் திணைக்களத்தின் கீழ் இந்தப் பரீட்சைகளை நடத்தும் வாய்ப்புகள் தொடர்பில் ஆராயவுள்ளனர்.

இந்த மாற்றம், மாணவர் தெரிவில் வெளிப்படைத் தன்மை, ஒருமைப்பாடு மற்றும் சமத்துவத்தை உறுதி செய்வதுடன், தற்போதைய முறையில் உள்ள குறைகளையும் சரி செய்ய உதவும் என நம்பப்படுகிறது. (அ)

# மக்காச் சோள இறக்குமதி அனுமதிக்கு எனக்கு இலஞ்சம் கொடுக்க முயன்றனர்!

### அமைச்சர் லால் காந்த கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 27

மக்காச்சோளம் இறக்குமதியாளர்களால் தனக்கு இலஞ்சம் கொடுக்கப்பட்டதாக கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டீ. லால் காந்த தெரிவித்தார்.

ஒரு நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் லால் காந்த, கடந்த நான்கு மாதங்களில் சிலர் தன்னைச் சந்தித்து மக்காச்சோளத்தை இறக்குமதி செய்ய அனுமதிக்குமாறு கோரிக்கை விடுத்தனர். அவர்கள் அதற்காக தனக்கு இலஞ்சம் கொடுக்க முயன்றதாகவும் கூறினார்.

அரசியலில் இருந்து ஊழலை முற்றிலுமாக ஒழித்துள்ளதாக அரசாங்கம் நிரூபித்துள்ளதாக அமைச்சர் லால் காந்த கூறினார்.

இருப்பினும், பொது சேவைகளில் ஊழல் அதிகமாக இருப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிட்டன் விதித்த தடையை நீக்க நடவடிக்கை வேண்டும்

## அரசிடம் மைத்திரிபால கோரிக்கை

கொழும்பு, மார்ச் 27

**இலங்கையின் முன்னாள் இராணுவத் தலைவர்கள் உள்ளிட்ட நான்கு பேருக்கு பிரிட்டன் அரசாங்கம் விதித்துள்ள தடைகளை நீக்குவதற்கு தற்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.**

இந்த நடவடிக்கை ஒரு சதித் திட்டம் என முன்னாள் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-இந்த பாதுகாப்புத் தலைவர்கள் தாய்நாட்டின் ஒருமைப்பாட்டிற்கும் பிராந்திய ஒருமைப்பாட்டுக்கும் போராடியவர்கள்.

அவர்கள் மக்களைக் கொல்லவில்லை. இறுதி இரண்டு வாரங்களை நினைவில் கொள்ளுங்கள். நாங்கள் இறந்து பிறப்பதில்லை. இனவாத முறையில் அவர்கள் அழிவுகளை ஏற்படுத்தவில்லை. நான் ஐந்து சந்தர்ப்பங்களில் பதில் பாதுகாப்பு அமைச்சராக இருந்தேன். பிரபாகரன் கொல்லப்பட்டபோது பதில் பாதுகாப்பு அமைச்சராக இருந்தவன் நான். எனவே, கடைசி இரண்டு வாரங்களில் என்ன நடந்தது என்பது எனக்குத் தெரியும். அதனால், எங்கள் முப்படை அதிகாரிகளுக்கு செய்யப்பட்டது மிகவும் அநீதியானது.

இவர்கள் நாட்டிற் காக தங்களை அர்ப்பணித்த வர்கள். எங்கள் இராணுவத் தினர் எத்தனை உயிர்களை தியாகம் செய்தார்கள்? அதை நாட்டுக்காகவே செய்தார்கள். அல்பிரட் துரையப்பா, அமிர்தலிங்கம் போன்றவர்களை புலிகள் இயக்கம் கொலை செய்தது. அவர்களை ஏன் கொலை செய்தார்கள்? இவை பற்றி பேசவேண்டும். ஆனால், எங்கள் இராணுவ உறுப்பினர்களுக்கு செய்யப்பட்டது ஒரு சதித்திட்டம். மக்கள் விழிப்புடன் இருக்கவேண்டும். யுத்தம் முடிவடையவில்லை என்றால், கொழும்போ பொலனறுவையோ மிச்சமிருக்காது. இந்த நாட்டை காப்பாற்றிய தேசிய வீரர்களுக்கு சர்வதேச அளவில் செய்யப்பட்ட அநீதியால் நான் மிகவும் அதிர்ச்சியடைகிறேன், அதேநேரம் துயரமடைகிறேன்- என்றார். (அ)



# தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு உணவுப் பொதி வழங்குவதற்கு அனுமதி

கொழும்பு, மார்ச் 26

தமிழ், சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு உணவுப் பொதியை பயனாளிகளுக்கு வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்றது. இதன் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-தமிழ், சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு சலுகை விலையில் உணவுப் பொதியொன்றை வழங்குவதற்காக ஜனாதிபதி 2025 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் சமர்ப்பித்துள்ள முன்மொழிவுக்கமைய, 5,000 ரூபாய் பெறுமதியான அத்தியாவசிய உணவுப் பொருட்கள் அடங்கிய "காலத்தின் தேவைக்கான உணவுப் பொதியொன்று" 2,500 ரூபாவுக்கு வழங்குவ தற்குத் திட்டமிடப்பட் டுள்ளது.



அதற்காக, அஸ்வெசும நலன்புரி நன்மைகளை எதிர்பார்த்து புதிதாக விண்ணப்பித்துள்ள 812,753 விண்ணப்பங்களில் தகைமையுடைய பயனாளிகளைத் தெரிவு செய்வதற்கு எதிர்பார்க்கப் படுகின்றது.

அதற்கமைய, 2025.04.01 தொடக்கம் 2025.04.13 வரையான காலப்பகுதியில் நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள சதொச விற்பனை நிலையங்கள் மூலமும் உணவுப் பொதியை பயனாளிகளுக்கு வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக விவசாயம், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் மற்றும் வர்த்தக, வணிக, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் இணைந்து சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது-என்றார். (அ)

# மாடு கடத்திய இருவர் கைது!

கொழும்பு, மார்ச் 27

திக்வெல்ல பகுதியில் சட்டவிரோதமான முறையில் லொறியின் ஊடாக மாடுகளை கடத்த முயன்ற சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸார் லொறியை நிறுத்த எத்தனித்த தருணத்தில் பொலிஸ் சமிக்ஞையை பொருட்படுத்தாது பயணித்த போது பொலிஸார் லொறியின் ரயருக்கு துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டு நிறுத்தியுள்ளனர்.

இதன் போது லொறியின் சாரதியும் உதவியாளரும் லொறியை நிறுத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளனர். இதன் போது லொறியை சோதனைக்கு உட்படுத்திய போது 11 மாடுகள் மீட்கப்பட்டுள்ளன. அதனை தொடர்ந்து பொலிஸார் முன்னெடுத்த சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ)

# வெளிநாட்டு சிகரெட்டுக்களுடன் இளைஞர் கட்டுநாயக்கவில் கைது!

கொழும்பு, மார்ச் 27

சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் இளைஞர் ஒருவன் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து விமான நிலைய பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினரால் நேற்று புதன்கிழமை அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

மொனராகலை எத்தில்வெவ பிரதேசத்தைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞனே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் டுபாயிலிருந்து நேற்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

இதன்போது, விமான நிலைய பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர் கொண்டு வந்த பயணப் பொதிகளிலிருந்து 23,200 வெளிநாட்டு சிகரட்டுகள் அடங்கிய 116 சிகரெட் காட்டுன்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை விமான நிலைய பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# காணி கையகப்படுத்தல் சட்டமூலத்தை திருத்தம் செய்ய அமைச்சரவை அனுமதி

கொழும்பு, மார்ச் 27

1950 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க காணிக் கையகப் படுத்தல் சட்டத்தைத் திருத்தம் செய்து குறித்த சட்டமூலத்தை துரிதமாகத் தயாரிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்றது.

இதன் போதே அவர் இதனை தெரிவித்துள் ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-தற்போது வலுவாக்கத்தில் உள்ள 1950 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க காணி கையகப் படுத்தல் சட்டத்தின் ஏற்பாடுகளைக் கடைப்பிடிக்கும் போது அதிக காலம் எடுப்பதால்,

காணி கையகப்படுத்தல் செயன்முறைக்கு எடுக்கின்ற காலத்தைக் குறைத்து,

இலகுவான முறைமை யொன்றின் கீழ் காணிகளைக் கையகப்படுத்து வதற்கும், குறித்த முறைமையின் கீழ் இழப்பீடுகளைச் செலுத்தக்கூடிய வகையில், குறித்த சட்டத்தை சமகாலத் தேவைகளுக்குப் பொருத்தமான வகையில் திருத்தம் செய்வதற்கு 2021.01.11 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கான அடிப்படைச் சட்டமூலம் தயாரிக்கின்ற நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்வதற்காக அமைச்சரவை கொள்கை ரீதியான அங்கீகாரம் வழங்கப்பட வேண்டுமென சட்டவரைஞர் அறிவித்துள்ளார்.

அதற்கிணங்க, விவசாயம், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனையைக் கருத்தில் கொண்டு, குறித்த சட்டமூலத்தை துரித மாகத் தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங் குவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது-என்றார். (அ)

# பிக்கு ஒருவர் சடலமாக மீட்பு!

கொழும்பு, மார்ச் 27

அனுராதபுரம், எப்பாவல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள ஒரு மடத்தில் 69 வயதுடைய பௌத்த பிக்கு ஒருவர் கொடூரமாகக் கொலை செய்யப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் எப்பாவல பொலிஸ் நிலையத்துக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கொலை செய்யப்பட்ட பிக்கு 69 வயதுடையவர் என்பதுடன் அவர் கிரலோகம பிரதேசத்தில் உள்ள துறவி மடத்தில் வசித்து வந்தார்.

பொலிஸாரின் ஆரம்பட்ட விசாரணைகளில் உயிரிழந்தவரின் பெயரில் முச்சக்கரவண்டி ஒன்றும் அதற்கு சாரதியும் இருந்ததாகவும், அந்தச் சாரதி தற்போது குறித்த பகுதியில் இல்லை எனவும் தெரியவந்துள்ளது.அத்துடன், இந்த கொலையை செய்தது யார் என்பது குறித்து இதுவரை எந்த தகவலும் வெளியாக வில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# இந்த ஆண்டு இறுதிக்குள் முதல் கேபிள் கார் திட்டம்!

கொழும்பு, மார்ச் 27

இந்த ஆண்டு இறுதிக்குள் இலங்கையில் முதல் கேபிள் கார் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்தத் திட்டத்தின் மூலம் இரண்டு மலைகளுக்கு இடையே ஒரு கிலோமீற்றருக்கும் அதிகமான தூரத்துக்கு செயல்படும் கேபிள் கார்களில் செல்லும் அரிய வாய்ப்பை இலங்கையில் அனுபவிக்க முடியும்.

மத்திய மலைநாட்டில் கம்பளைப் பிரதேசத்தில் அமைந்துள்ள அம்புலுவாவ மலைசிகரத்தில் இருந்து அம்புலுவாவ மத மற்றும் பல்லுயிர் வளாகம் வரை 1.8 கிலோமீற்றர் தூரத்தை உள்ளடக்கியதாக கேபிள் கார்த் திட்டம் வடிவமைக்கப்பட்டுவருகிறது.

இந்த கேபிள் கார் திட்டம் சீன மற்றும் அமெரிக்க முதலீட்டாளர்களின் கூட்டு முயற்சியாகும். இந்த திட்டத்தின் முதல் கட்டம் இவ் ஆண்டு ஒக்ரோபர் மாதத்துக்குள் நிறைவடையவுள்ளது. (அ)

# மருந்துகளுக்கு சில்லறை விலை

கொழும்பு, மார்ச் 27

மருந்துகளுக்கான அதிகபட்ச சில்லறை விலை பொறிமுறையை ஒழுங்குபடுத்துவதற்கான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான வர்த்தமானியை சுகாதார அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ வெளியிட்டுள்ளார். மருந்து ஒழுங்குமுறை ஆணைக்குழு ஆண்டுக்கு இரண்டு முறை அதிகபட்ச விலையை மாற்றியமைக்க அதிகாரம் பெற்றுள்ளதுடன், டொலரின் பெறுமதி ஏற்ற இறக்கமாக இருந்தால், பொது மக்களின் நலனுக்காக எந்த நேரத்திலும் இந்த அதிகபட்ச விலைகளை மாற்றுவதற்கான சட்டபூர்வ அதிகாரத்தையும் அவர்கள் கொண்டுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிட்டன் பயணத்தடை குறித்து அரசு பதில் வழங்கவேண்டும்!

## சஞ்சீவ எதிரிமன்ன கோரிக்கை

கொழும்பு, மார்ச் 27

**நாட்டின் இராணுவத்தினருக்கு எதிராக பிரித்தானியா விதித்துள்ள பயணத்தடை தொடர்பில அரசாங்கம் உறுதியான பதிலை அளிக்க வேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சஞ்சீவ எதிரிமன்ன தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-இலங்கையில் மனிதாபிமானப் பணியில் ஈடுபட்டிருந்த ஜெனரல் சவேந்திர சில்வா, அட்மிரல் வசந்த கரன்னகொட , ஜகத் ஜெயசூரிய ஆகிய மூவர் மீது பிரித்தானியா விதித்த இடைக்காலத் தடை தொடர்பான இந்த முடிவைப் பற்றி அநுர குமார திஸாநாயக்கவின்



அரசாங்கத்தின் பதில் என்ன என்பதை நாமும், இந்த நாட்டின் ஒட்டுமொத்த மக்களும் ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

இந்த முடிவு, எமது பார்வையில், இராஜதந்திர நெறிமுறைகளுக்கு முரணானதாகும். அதேபோல் உலகின் நவீன கோட்பாடுகளுக்கு முரணானதாகும்.

நாட்டின் இராஜதந்திர பெருமைக்காக இந்த தவறான முடிவுக்கு அரசாங்கம் உடனடியாக ஒரு உறுதியான பதிலை வழங்க வேண்டும்.

தற்போதைய அரசாங்கத்தின் இராஜதந்திர திறனை அறிந்து கொள்ளக்கூடிய சிறந்த தருணமாக இது அமைந்துள்ளது.

இந்த அரசாங்கம் பல விடயங்களில் தோல்வியடைந்துள்ளது. அரசாங்கத்தின் இராஜதந்திர அலுவலகம் எங்கு உள்ளது என்பதை நாங்கள் அவதானமாக கண்காணித்து வருகின்றோம்-என்றார். (அ)

# மே 10 முதல் 16 ஆம் திகதி வரை தேசிய வெசாக் கொண்டாட்டம்!

கொழும்பு, மார்ச் 27

தேசிய வெசாக் விழா, மே மாதம் 10 ஆம் திகதி முதல் 16ஆம் திகதி வரை நுவரெலியாவில் நடைபெறவுள்ளதாக, பௌத்த சாசன அமைச்சர் ஹினிதும சுனில் செனவி தெரிவித்துள்ளார்.

பிரஜைகளின் ஆன்மிக பலம் அனைத்து மக்களுடனும் இணைந்து வளரும் வகையில் இவ்வருடம் தேசிய வெசாக் விழா நுவரெலியாவில் நடைபெறவுள்ளதாக அவர் கூறினார்.

நுவரெலியா மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-மே மாதம் 10 ஆம் திகதி முதல் 16ஆம் திகதி வரை தேசிய வெசாக் விழாவை கொண்டாட திர்மானித்துள்ளோம்.

அவற்றிலிருந்து தொடர்ந்து 6 நாட்கள் பல கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. ஜனாதிபதியின் தலைமையில் நுவரெலியா மாவட்டத்தில் இவ் நிகழ்வு ஆரம்பிக்கப்படவுள்ளது. இந் நிகழ்வின் கருத்தாக "அனைத்து மத இன மக்களின் வாழ்க்கையுடன் ஒரு பிரஜைகளின் ஆன்மிக பலம் அனைத்து மக்களுடனும் இணைந்து வளர வேண்டும்" என்ற பொருளாகும். இவற்றுடன் நான்கு வருடத்திற்கு ஒரு முறை நடைபெறும் தேர் திருவிழாவும் நடைபெறவுள்ளது. மக்களின் மனம் நிறையும் வகையிலும் பிரஜைகளின் ஆன்மிக பலம் அனைத்து மக்களுடனும் இணைந்து வளரும் வகையில் பௌத்த சாசனங்களுக்கு ஏற்றவகையில் இந்த தேசிய வெசாக் விழாவை கொண்டாட தீர்மானித்துள்ளோம்-என்றார். (அ)

களியாட்ட விடுதி மோதல்

# யோஷிதவுடன் சென்ற 3 பேர் பொலிஸில் சரண் !

கொழும்பு, மார்ச் 27

கொழும்பு யூனியன் பிளேசில் உள்ள இரவு நேர களியாட்ட விடுதிக்கு வெளியில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு ஏற்பட்ட மோதலுடன் தொடர்புடைய மூன்று சந்தேக நபர்கள் மத்திய கொழும்பு பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவில் நேற்று புதன்கிழமை சரணடைந்துள்ளனர்.

கொழும்பு யூனியன் பிளேசில் உள்ள இரவு நேர களியாட்ட விடுதிக்குக் கடந்த வெள்ளிக்கிழமை இரவு யோஷித ராஜபக்ஷ மற்றும் அவரது மனைவியுடன் குழுவொன்று சென்றுள்ளது.

இதன்போது, இரவு நேரக் களியாட்ட விடுதிக்கு வெளியில் யோஷித ராஜபக்ஷவுடன் சென்ற குழுவுக்கும் களியாட்ட விடுதியின் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டுள்ளது.

மோதலின்போது யோஷித ராஜபக்ஷவுடன் சென்ற குழுவினர் களியாட்ட விடுதியின் பாதுகாப்பு உத்தியோகத்தர்களைத் தாக்கிவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றிருந்தனர்.

இந்த மோதல் சம்பவம் இரவு நேரக் களியாட்ட விடுதிக்கு வெளியில் உள்ள சி.சி.ரி.வி. கமெராவில் பதிவாகியுள்ளது.இது தொடர்பில் பொலிஸாரால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் மோதலுடன் தொடர்புடைய மூன்று சந்தேக நபர்கள் மத்திய கொழும்பு பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவில் நேற்று சரணடைந்துள்ளனர். (அ)

# இந்த வருடத்தின் இரண்டு மாதங்களில் ஏற்றுமதியில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி!

கொழும்பு, மார்ச் 27

இவ்வருடத்தின் பெப்ரவரி மாதத்தில் மொத்த ஏற்றுமதி ,பொருட்கள் மற்றும் சேவைகள் இரண்டையும் சேர்த்து 1,382.53 மில்லியன் அமெரிக்க டொலர்களாக உயர்ந்துள்ளது.

இது 2024 பெப்ரவரி மாதத்துடன் ஒப்பிடும்போது 4.62 வீதம் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் காட்டுகிறது என்று இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது.

மேலும், 2025 ஜனவரி மாதத்துடன் ஒப்பிடும்போது பெப்ரவரி மாதத்தில் ஏற்றுமதி 2.58 வீதம் மாதாந்த வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

இலங்கை சுங்கத் திணைக்களத்தின் தற்காலிக தரவுகள் மற்றும் இரத்தினக் கற்கள் ,நகைகள் மற்றும் கனிம எண்ணெய்ப் பொருட்கள் ஆகியவற்றிற்கான மதிப்பிடப்பட்ட புள்ளிவிவரங்களின்படி, 2025 பெப்ரவரி மாதத்தில் பொருட்களின் ஏற்றுமதியின் மதிப்பு 1,056.39 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும்.

2025 பெப்ரவரி மாதத்தில் சேவைகளின் ஏற்றுமதி 326.14 மில்லியன் அமெரிக்க டொலர்களாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது 2024 இன் இதேகாலகட்டத்துடன் ஒப்பிடும்போது 24.37 வீதம் வளர்ச்சியைக் காட்டுகிறது.

இருப்பினும்,பொருட்கள் மற்றும் சேவைகள் இரண்டையும் சேர்த்து மொத்த ஏற்றுமதி 2025 ஜனவரி முதல் பெப்ரவரி வரையிலான காலத்திற்கு 2,730.33 மில்லியன் அமெரிக்க டொலர்களா கமதிப்பிடப்பட்டுள்ளது. இது 2024 இல் இதே காலத்துடன் ஒப்பிடும்போது 6.65 வீத வளர்ச்சியைக் காட்டுகிறது.

இலங்கை சுங்கத் திணைக்களத்தின் தரவுகள் மற்றும் இரத்தினக் கற்கள்,நகைகள் மற்றும் கனிம எண்ணெய்ப் பொருட்கள் ஆகியவற்றிற்கானமதிப்பிடப் பட்டபுள்ளி விவரங்களின் அடிப்படையில், 2025 இன் முதல் இரண்டு மாதங்களில் பொருட்களின் ஏற்றுமதி 3.9 வீதம் அதிகரித்து 2,109.19 மில்லியன் அமெரிக்க டொலர்களாக உயர்ந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கிடை யில், சேவைகளின் ஏற்றுமதியின் மதிப்பிடப்பட்டமதிப்பு 2024 ஆம் ஆண்டின் இதேகாலப்பகுதியுடன் ஒப்பிடும்போது 17.2 வீதம் அதிகரித்து 621.14 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

# ஊழல் எதிர்ப்பு தேசிய செயல்திட்டத்தை அமுல்படுத்த அமைச்சரவை அங்கீகாரம்!

கொழும்பு, மார்ச் 27

ஊழல் எதிர்ப்பு தேசிய செயற்பாட்டுத் திட்டத்தை 2025 முதல் 2029 வரையான காலப்பகுதியில் அமுல்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்றது.இதன் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-2023 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் மூலம் ஊழலை ஒழிப்பதற்காக ஊழல் எதிர்ப்புக் கொள்கையை நடைமுறைப் படுத்தல் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் வரைக்கும் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் "கிளின் ஸ்ரீலங்கா" வேலைத்திட்டம் இலங்கைச் சமூகத்தை விழுமிய ரீதியான அபிவிருத்தி மட்டத்திற்கு உயர்த்துவதற்கு முயற்சிக்கப்படுவதுடன், அனைத்துப் பிரிவுகளையும் உள்வாங்கிக் கொண்டு பலம்வாய்ந்த ஊழல் எதிர்ப்புக் கொள்கையைத் தயாரித்து அமுல்படுத்த வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அத்துடன், ஊழலுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் சபையின் சமவாயத்தில் விதிக்கப்பட்டுள்ளவாறு தேசிய ஊழல் எதிர்ப்புப் பணிச்சட்டகமொன்றைத் தயாரித்து அமுல்படுத்த வேண்டிய தேவையும், சர்வதேச ரீதியாகவுள்ள ஒருசில கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்காக பலம்வாய்ந்த ஊழல் எதிர்ப்புப் பணிச்சட்டகமொன்றை அமுல்படுத்த வேண்டியுள்ளது.

ஊழலுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் சபையின் சமவாயத்தில் 5 ஆம் உறுப்புரையின் கீழான கடப்பாடுகளுக்கு இணங்க இலங்கையில் இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிரான முதலாவது தேசிய செயற்பாட்டுத் திட்டம் 2019 - 2023 காலப்பகுதியில் நடைமு றைப் படுத்தப்பட்டுள்ளது.

குறித்த செயற்பாட்டுத் திட்டத்தை மீளாய்வு செய்து, உள்நாட்டு மற்றும் சர்வதேச பங்காளர்களின் பங்கேற்புடன் 2025-2029 காலப்பகுதிக்கான புதிய ஊழல் எதிர்ப்பு தேசிய செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க, அமைச்சுக்கள், திணைக்களங்கள், அனைத்து அரச நிறு வனங்கள் மற்றும் ஏற்புடைய அனைத்துத் தரப்பினர்களின் ஒத்துழைப்புடன் ஊழல் எதிர்ப்பு தேசிய செயற்பாட்டுத் திட்டத்தை அமுல்படுத்துவதற்காக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்ச ரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது-என்றார். (அ)

# பிரமிட் மோசடியில் சிக்கும் மக்கள் மத்திய வங்கி ஆளுநர் எச்சரிக்கை!

கொழும்பு, மார்ச் 27

பெரும்பான்மையான மக்களுக்கு நிதி தொடர்பான அறிவு இல்லாமையினாலேயே பிரமிட் போன்ற மோசடிக்குள் பலர் சிக்கி வருவதாக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார். இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களால் வழங்கப்படும் புதிய தொழிநுட்ப சேவைகள் குறித்து பொதுமக்களுக்கு விளக்கமளிக்கும் நிகழ்வில் வைத்து கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-உங்கள் கையில் பணம் இருந்தாலும், அது தவறாகப் பயன்படுத்தப்படுவதற்கும், மோசடிக்கு ஆளாக நேரிடுவதற்கும் அதிக வாய்ப்பு உள்ளது. குறிப்பாக இணையத்தில் வெளியிடப்படும் விளம்பரங்களைப் பார்க்கிறோம். அதில் சலுகைகள் காட்சிப்படுத்தப்படுகின்றன.

இவற்றை வழங்குவதாக மின்னஞ்சல்கள் வருகின்றன. இப்போது, புதிதாக வந்துள்ள விடயம் என்னவென்றால், பல்வேறு விவசாய நடவடிக்கைகளுக்காக பணம் திரட்டுவதற்காக விரிவாக விளம்பரம் செய்கிறார்கள்.

அதாவது, நீங்கள் மரங்களை நட்டு முதலீடு செய்தால் பெரும் நன்மைகளைப் பெறுவீர்கள். பழங்களைப் பயிரிட்டால் அவை கிடைக்கும் என்றும் அல்லது நீங்கள் வல்லப்பட்டை பயிரிட்டால், அவை கிடைக்கும் என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

இந்நிலையில், மக்களின் நிதி அறிவை அபிவிருத்தி செய்வதற்கான வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவுணதீவு பொலிஸார் கொலை:

# சந்தேகநபர்கள் நால்வரையும் நீதிமன்றில் முற்படுத்த பணிப்பு

மட்டக்களப்பு, மார்ச் 27

**வவுணதீவில் இரு பொலிஸாரை வெட்டியும் துப்பாக்கியால் சுட்டும் கொன்ற குற்றத்தில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் சூத்திரதாரியான சஹ்ரான் குழுவை சேர்ந்த நால்வரையும் எதிர்வரும் ஜூன் 25ஆம் திகதி மன்றில் முற்படுத்துமாறு மட்டக்களப்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.**

மட்டக்களப்பு - வவுணதீவு - வலையிறவு பாலம் அருகேயுள்ள சோதனை சாவடியில் கடந்த 2018 நவம்பர் 29 ஆம் திகதி இரவு கடமையில் இருந்த பொலிஸ் சார்ஜன்ட் நிரோசன் இந்திர பிரசன்ன, பொலிஸ் கான்ஸ்டபிள் தினேஷ் ஆகிய இரு பொலிஸார் துப்பாக்கியால் சுடப்பட்டும் வெட்டியும் கொல்லப்பட்டனர்.

இந்த சம்பவம் தொடர்பில் 2019 ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சூத்திரதாரியான சஹ்ரான் குழுவை சேர்ந்த கபூர் மாமா என அழைக்கப்படும் சஹ்ரானின் சாரதியான முகமது சர்ப் ஆதம்லெப்பை, மில்ஹான், பிரதோஸ், நில்காம் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

இவர்களுக்கு எதிரான வழக்கு கடந்த திங்கட்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டது. கொழும்பில் இருந்து இந்த நால்வரும் விசேட அதிரடிப் படையினரின் பலத்த பாதுகாப்புடன் அழைத்துவரப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். இதன்போதே இவர்களை எதிர்வரும் ஜூன் 25ஆம் திகதி மன்றில் முற்படுத்துமாறு நீதிபதி உத்தரவிட்டார். (ஐ)

# பத்திரகாளி அம்பாளுக்கு ஏப்ரல் 01 கொடியேற்றம்!

திருகோணமலை, மார்ச் 27

திருகோணமலை அருள்மிகு பத்திரகாளி அம்பாள் ஆலய பெருந்திருவிழா எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

பெருந்திருவிழாவின் 10ஆம் நாளான எதிர்வரும் ஏப்ரல் 10ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை காலை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

அடுத்தநாளான சனிக்கிழமை பூங்காவனத்திருவிழா நடைபெறும்.

பெருந்திருவிழா நாட்களில் அதிகாலை 5.30 மணிக்கு அபிஷேகம், காலை 7.00 மணிக்கு மூலஸ்தான பூசை, 7.45 க்கு தம்ப பூசை, 8.30 மணிக்கு வசந்த மண்டப பூசை, பிற்பகல் 2.30 மணிக்கு அபிஷேகம், 3.30 மணிக்கு மூலஸ்தான பூசை, மாலை 4.15 மணிக் தம்ப பூசை, மாலை 5.00 மணிக்கு வசந்த மண்டப பூசை நடைபெற்று 6.00 மணிக்கு அம்பாள் வீதியுலா வருவார் என்று ஆலய நிர்வாகம் தெரிவித்துள்ளது. (ஐ)



# மட்டக்களப்பு முன்பள்ளி சிறாரின் ஓவிய கண்காட்சி

மட்டக்களப்பு, மார்ச் 27

மட்டக்களப்பில் முன்பள்ளி சிறார்களால் வரையப்பட்ட ஓவிய கண்காட்சியானது மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் தலைமையில் புதிய மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

கிளீன் சிறீ லங்கா வேலைத் திட்டத்தின் கீழ் மாவட்ட செயலக முன்பிள்ளை பருவ அபிவிருத்தி பிரிவு மற்றும் கலாசார பிரிவும் ஒருங்கிணைந்த ஏற்பாட்டில் இவ் நிகழ்வு நடைபெற்றது. முன்பள்ளி சிறார்களின் கற்பனை ஆக்கத்திறனை மேம்படுத்தும் முகமாக இந் நிகழ்வு புதிய மாவட்ட செயலக வளாகத்தில் நடைபெற்றது.

மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவின் திராய்மடு கிராம சேவகர் பிரிவை சேர்ந்த 5 முன்பள்ளி பாடசாலைகளின் சிறார்களின் ஓவியங்கள் காட்சி படுத்தப்பட்டன. அத்துடன், அரச சார்பற்ற நிறுவனங்களின் அனுசரணையில் பங்கு பற்றிய மாணவர்களுக்கு பரிசு பொருட்களும் சான்றிதழ்களும் அரசாங்க அதிபரால் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் மாவட்ட செயலக உயர் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், அனுசரணையாளர்கள் பெற்றோர்கள் முன்பள்ளி ஆசிரியர்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ)

# மலசலகூடத்தில் உணவு தயாரிப்பு; உரிமையாளருக்கு ஒரு மாத சிறை!


மட்டக்களப்பு, மார்ச் 27

செங்கலடி பொது சுகாதார பிரிவிலுள்ள உணவகம் ஒன்றில் மலசலகூடத்தில் உணவு தயாரித்து விற்பனை செய்தவருக்கு ஒரு மாத கால சிறைத் தண்டனையும் 60 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதித்து ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற மேலதிக நீதிவான் உத்தரவிட்டார்.

கடந்த திங்கட்கிழமை செங்கலடி பகுதியில் பொது சுகாதார பரிசோதகர்கள் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதன்போது, ஓர் உணவகத்தின்மலசல கூடத்தில் உணவு தயாரித்து விற்பனை செய்யப்பட்டமை கண்டறியப்பட்டது.

இதையடுத்து, அந்த உணவக உரிமையாளர் கைது செய்யப்பட்டு, ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார். இதன்போதே, உணவக உரிமையாளருக்கு ஒரு மாத சிறையும் 60 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது.

இதேசமயம், கிழக்கு பல்கலைக்கழகத்துக்கு அருகில் வீதியோர கடைகள் இரண்டுக்கு மனித பாவனைக்கு உதவாத உணவுகளை விற்பனை செய்த மைக்காக தலா 10 ஆயிரம் ரூபாய் வீதம் 20 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. (ஐ)



# பல சமயங்கள் சங்கமித்த சமாதான இப்தார் நிகழ்வு

மட்டக்களப்பு, மார்ச் 27

ஆரையம்பதி சிகரம் ஜும் ஆப் பள்ளிவாசலில் சமயங்கள் சங்கமித்த சமாதான இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் சிறப்பாக நடைபெற்றது.

கரித்தாஸ் எகெட் நிறுவனத்தின் பல் சமயக் குழுவின் ஏற்பாட்டில் இந்த இப்தார் நிகழ்வு நடைபெற்றது.

புதிய காத்தான்குடி அல் அக்ஸா ஜும்ஆப் பள்ளிவாசல் இமாம் இல்ஹாம் பலாஹி விசேட உரையை நிகழ்த்தியதுடன் கரித்தாஸ் எகெட் நிறுவனத்தின் இயக்குநர் அருட்தந்தை அன்ரனி ஜெயராஜ், முன்னாள் இயக்குநர் அருட்தந்தை ஜே. ஜேசுதாசன், அருட்தந்தை ஜெகதீஸ், சிவசிறீ ஜெகதீஸ் குருக்கள் உட்பட பலர் இந்த நிகழ்வில் பங்கேற்றனர். (ஐ)

# பெண்ணின் நிர்வாண படங்களை பகிர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள் கைது!

மட்டக்களப்பு, மார்ச் 27

தன்னுடன் தொடர்பில் இருந்த பெண்ணின் நிர்வாண படங்கள் மற்றும் காணொலிகளை சமூக வலைதளங்களில் பகிர்ந்த குற்றச்சாட்டில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபர் மட்டக்களப்பு பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரிவில் பணியாற்றுபவராவார்.

சந்தேகநபரான கான்ஸ்டபிள் பொத்துவிலை சேர்ந்த பெண்ணுடன் தொடர்பில் இருந்துள்ளார். அவருடன் ஏற்பட்ட முரண்பாட்டை தொடர்ந்தே பெண்ணின் நிர்வாண படங்களையும் காணொலிகளையும் சமூகவலைதளத்தில் பகிர்ந்துள்ளார் என்று அறிய வருகிறது.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட பெண் அளித்த முறைப்பாட்டுக்கு அமைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ)

# அம்பாறை கச்சேரியில் இப்தார்!

கல்முனை, மார்ச் 26

அம்பாறை மாவட்ட செயலகத்தின் வருடாந்த இப்தார் நிகழ்வு அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்கிரம தலைமையில் மாவட்ட செயலக முன்றலில் நடைபெற்றது.



சமூக நல்லிணக்க இப்தாராக கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற இந்த நிகழ்வில் நோன் பின் மாண்புகளை பற்றி மௌலவி சஹ்ரான் ஹஸன் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் திகவாபி விகாராதிபதி பேதி வேல சந்தானந்த நாயக்க, கல்முனை சிவசிறீ க.வி பிரமின் குருக்கள், அம்பாறை மெதடிஸ்த தேவாலய அருட்தந்தை ஜெஹான் அப்புகாமி உட்பட மதத்தலைவர்கள் பலரும் கலந்து கொண்டனர். (எ-05)

# வாய்க்காலில் விழுந்த குழந்தை உயிரிழப்பு!

திருகோணமலை, மார்ச் 27

வீட்டின் முன்னாலிருந்த வாய்க்காலில் தவறிவிழுந்து குழந்தை ஒன்று உயிரிழந்தது.

திருகோணமலை - தம்பலகாமம் - சிராஜ் நகரை சேர்ந்த மிஹ்ரான் இஷான் என்ற ஒன்றரை வயது குழந்தையே இவ்வாறு உயிரிழந்தது.


வீட்டின் முன்னால் நின்றிருந்த குழந்தையை காணவில்லை என்று தேடியபோதே குழந்தை சடலமாக மீட்கப்பட்டது.

விசாரணைகளை தம்பலகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடா பாராளுமன்ற தேர்தலில் இந்தியா, சீனாவின் தலையீடுகள்

## புலனாய்வு அமைப்பு எச்சரிக்கை



ஒட்டாவா, மார்ச் 27

**அடுத்த மாதம் நடைபெற உள்ள கனடா நாட்டின் பாராளுமன்ற தேர்தலில் சீனா, இந்தியா, ரஷ்யா மற்றும் பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகளின் தலையீடு இருக்கலாம் என சி. எஸ். ஐ. எஸ். எனப்படும் அந்த நாட்டின் புலனாய்வு அமைப்பு தெரிவித்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.**

இந்தியாவில் சீக்கியர்களுக்கு தனி நாடு வேண்டும் எனக் கோரி காலிஸ்தான் உள்ளிட்ட சில பிரிவினைவாத இயக்கங்கள் வெளிநாடுகளில் செயல்பட்டு வருகின்றன. இந்த சூழலில் கனடாவில் வசித்த காலிஸ்தான் தலைவர் ஹர்தீப் சிங் நிஜார் கடந்த ஆண்டு ஜூன் மாதம் சுட்டுக் கொல்லப்பட்டார். இதில் இந்தியாவுக்கு தொடர்பு இருப்பதாக அந்நாட்டு பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ குற்றஞ்சாட்டியிருந்தார். இதைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு விரிசல் அடைந்தது. இந்நிலையில், தேர்தலில் தலையிடலாம் என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

“ஜனநாயக முறைப்படி நடைபெறும் கனடா நாட்டு தேர்தலில் செயற்கை நுண்ணறிவை சீனா பயன்படுத்த வாய்ப்புள்ளது. இதே போல கனடாவில் வசிக்கும் பல்வேறு சமூகங்கள் மற்றும் நாட்டின் ஜனநாயக செயல்முறைகளில் தலையிடும் நோக்கமும் அதற்கான திறனையும் இந்திய அரசாங்கம் கொண்டுள்ளது என்பதை நாங்கள் அடையாளம் கண்டுள்ளோம்” என சி. எஸ். ஐ. எஸ். அமைப்பின் துணை இயக்குநர் வனேசா லாயிட் கூறியுள்ளார்.

அமெரிக்காவின் வரி விதிப்பு அழுத்தம் உள்ளிட்ட பல்வேறு சவால்களை கனடா எதிர்கொண்டுள்ள நிலையில் எதிர்வரும் 28ஆம் திகதி அங்கு தேர்தல் நடைபெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# தொடரும் காட்டுத்தீயால் 43 ஆயிரம் ஏக்கர் காடு நாசம்!

## 18 பேர் உயிரிழப்பு

சியோல், மார்ச் 27

தென்கொரியாவின் கியோங்சாங் மாகாணத்தில் பரவி வரும் காட்டுத் தீயால் 18 பேர் உயிரிழந்தனர். 27 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

இதேவேளை, பரவி வரும் காட்டுத் தீயால் 200இற்கும் மேற்பட்ட கட்டமைப்புகள் அழிவடைந்துள்ளன. இதுவரை, 43 ஆயிரத்து 330 ஏக்கர் காடுகள் எரிந்து நாசமாகின. இந்தக் காட்டுத் தீயால் பழங்கால விகாரை, தொழிற்சாலை, வீடுகள், வாகனங்கள் எனப் பல அழிக்கப்பட்டன.

தொடர்ந்து பலத்த காற்று வீசி வருவதால் தீயை அணைக்கும் பணி சிரமமாகியுள்ளது. 4 ஆயிரத்து 650 தீயணைப்பு வீரர்கள் 130 ஹெலிகொப்டர்களின் உதவியுடன் காட்டுத் தீயை அணைக்கப் போராடி வருகின்றனர். (ஐ)



# 2026 தேர்தலில் தமிழ்நாட்டில் பா.ஜ.க. - அ.தி.மு.க. கூட்டணி!

புதுடில்லி, மார்ச் 27

புதுடில்லி சென்ற தமிழ்நாடு எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவை நேற்று முன்தினம் சந்தித்தார். இதைத் தொடர்ந்து “2026இல் தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமையும்”, என்று அமித்ஷா தனது சமூக வலைதளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

பா. ஜ. கவுடன் கூட்டணி இல்லை என்பதில் உறுதியாக இருந்த பழனிசாமி, கடந்த மக்களவைத் தேர்தலை பா. ஜ. க. இல்லாமல் சந்தித்தார். அந்த தேர்தலில் அதிமுக கூட்டணி அனைத்து இடங்களிலும் தோல்வியடைந்தது. ஆனால், தேர்தலுக்கு முன்பே அதிமுகவின் 2ஆம் கட்டத் தலைவர்கள் பா. ஜ. கவுடன் கூட்டணி சேர தொடர்ந்து விருப்பம் தெரிவித்திருந்தனர்.

தேர்தல் முடிவுக்கு பின்னர், ஹதேர்தலில் பாஜகவுடன் கூட்டணி வைத்திருந்தால், கணிசமான இடங்களைப் பெற்றிருக்கலாம்” என்று அவர்கள் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையிலேயே நேற்று முன்தினம் இரவு திடீரென மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவை அவரின் இல்லத்தில் அ. தி. மு. க. பொதுச் செயலாளர் பழனிசாமி உள்ளிட்டோர் சந்தித்துப் பேசினர்.

இதைத் தொடர்ந்து அமித்ஷா தனது எக்ஸ் வலைதளத்தில், ‘2026ல் தமிழகத்தில் தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு அமைந்த பின்பு, மது வெள்ளமும், ஊழல் புயலும் முடிவுக்கு வந்துவிடும்’ என்று குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# ஆக்கிரமிப்பு காஷ்மீரிலிருந்து பாகிஸ்தான் வெளியேறவேண்டும்!

## ஐ. நா. சபையில் இந்தியா வலியுறுத்து

நியூயோர்க், மார்ச் 27

ஜம்மு காஷ்மீர் பிரதேசத்தை பாகிஸ்தான் தொடர்ந்து சட்டவிரோதமாக ஆக்கிரமித்து வருகிறது. அங்கிருந்து பாகிஸ்தான் உடனடியாக வெளியேற வேண்டும் என்றும் ஐக்கிய நாடுகள் சபையில் இந்தியா வலியுறுத்தியது.

ஐ. நா. பாதுகாப்பு சபையின் வெளிப்படையான விவாதத்தின் போது ஜம்மு காஷ்மீர் பிரச்னையை பாகிஸ்தான் எழுப்பியிருந்தது.

இது தொடர்பில் பாகிஸ்தான் வெளிவிவகார துணை அமைச்சர் தாரிக் படாமி கூறுகையில்,

இந்திய ஆக்கிரமிப்பு காஷ்மீரில் வசிக்கும் மக்களிடம் பொதுவாக்கெடுப்பு நடத்துவது என்ற தனது தீர்மானத்தை ஐ. நா. பாதுகாப்பு சபை நிறைவேற்ற வேண்டும். காஷ்மீர் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதி கிடையாது. ஐ. நாவின் அதிகாரபூர்வ வரைபடத்தில் ஜம்மு காஷ்மீர் சர்ச்சைக்குரிய பகுதி என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.” என்று தெரிவித்தார்.

அவரின் இந்த உரைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பேசிய ஐ. நாவுக்கான இந்தியாவின் நிரந்தர வதிவிட பிரதிநிதி பர்வதனேனி ஹரிஷ்,

“ஜம்மு காஷ்மீர் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதியாக நேற்றும் இருந்தது, இன்றும் இருக்கிறது, எப்போதும் இருக்கும். ஜம்மு காஷ்மீர் பிரதேசத்தை பாகிஸ்தான் தொடர்ந்து சட்டவிரோதமாக ஆக்கிரமித்துள்ளது. அங்கிருந்து உடனடியாக வெளியேற வேண்டும். ஜம்மு - காஷ்மீர் யூனியன் பிரதேசம் குறித்து பாகிஸ்தான் பிரதிநிதி மீண்டும் தேவையற்ற கருத்துகளை தெரிவித்திருப்பதை இந்தியா கவனிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. இதுபோன்ற தொடர்ச்சியான உரைகள், காஷ்மீர் தங்கள் பகுதி எனும் அவர்களின் சட்டவிரோத உரிமை கோரல்களை உறுதிப்படுத்தாது. மேலும், பாகிஸ்தான் அரசு ஆதரவுடன் நடைபெறும் எல்லை தாண்டிய பயங்கரவாதத்தையும் நியாயப்படுத்தாது.” என்றார். (ஐ)

# நடிகர் மனோஜ் காலமானார்!



சென்னை, மார்ச் 27

தமிழ்த் திரையுலகின் பிரபல இயக்குநர் பாரதிராஜாவின் மகனும் நடிகருமான மனோஜ் பாரதி (வயது 46) நேற்று முன்தினம் காலமானார்.

அவருக்கு இதய சத்திர சிகிச்சை நடைபெற்று, சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார்.

1999ஆம் ஆண்டு தாஜ்மகால் என்ற திரைப்படம் மூலம் அறிமுகமான அவர், வருஷமெல்லாம் வசந்தம், கடல் பூக்கள், சமுத்திரம், அல்லி அர்ஜுனா, விருமன், மாநாடு, ஈரநிலம் உள்ளிட்ட படங்களில் நடித்துள்ளார்.

அவரின் மறைவுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் உட்பட அரசியல், திரையுலக பிரபலங்கள் பலரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். (ஐ)

# தாய்லாந்து பிரதமர்மீது நம்பிக்கையில்லா பிரேரணை!



பாங்கொக், மார்ச் 27

தாய்லாந்து பிரதமர் பேடோங்டார்ன் ஷினவத்ராமீது பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவந்துள்ளன.

தாய்லாந்தில் பிரதமர் பேடோங்டார்ன் ஷினவத்ரா தலைமையிலான பியூ தாய் கட்சி ஆட்சி நடைபெறுகிறது. அங்கு அண்மைக்காலமாக, கடும் பொருளாதார நெருக்கடி நிலவுகிறது.

இதற்கு பேடோங்டார்னின் தந்தையும் முன்னாள் பிரதமருமான தக்சின் ஷினவத்ரா அரச நிர்வாகத்தில் செல்வாக்கு செலுத்துவதே காரணம் என எதிர்க் கட்சி தலைவர் நத்தபோங்ருயெங் பன்யாட் குற்றஞ்சாட்டி வந்தார். இந்தநிலையில் பேடோங்டார்ன் மீது பாராளு மன்றத்தில் எதிர்க் கட்சிகள் நம் பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



### ஐ. பி. எல். தொடர்:

# பஞ்சாப் கிங்ஸிடம் வீழ்ந்தது குஜராத்!

அகமதாபாத், மார்ச் 27

நடப்பு ஐ. பி. எல். தொடரின் 5ஆவது லீக் போட்டியில் குஜராத் ரைட்டன்ஸ் மற்றும் பஞ்சாப் கிங்ஸ் அணி கள் விளையாடின. இதில், பஞ்சாப் அணி 11 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

அகமதாபாத்தில் உள்ள நரேந்திர மோடி கிரிக்கெட் மைதானத்தில் இந்தப் போட்டி நடைபெற்றது. இதில் நாணயச் சுழற்சியில் வென்ற குஜராத் அணியின் தலைவர் /ப்மன் கில் பந்து வீச முடிவு செய்தார். பஞ்சாப் கிங்ஸ் அணிக்காக அறிமுகம் வீரர் பிரியான்ஷ் ஆர்யா மற்றும் பிரப்சிம்ரன் சிங் இணைந்து இன்னிங்ஸை தொடங்கினர்.

5 ஓட்டங்களில் ஆட்டமிழந்து ஏமாற்றம் தந்தார் பிரப்சிம்ரன் சிங். தொடர்ந்து அந்த அணியின் தலைவர் ஸ்ரேயாஸ் ஐயர் துடுப்பெடுத்தாட வந்தார். இரண்டாவது விக்கெட்டுக்கு 51 ஓட்டங்கள் இணைப்பாட்டம் அமைத்தனர் பிரியான்/ம் ஸ்ரேயாஸ/ம். பிரியான்ஷ் 23 பந்துகளில் 47 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். 7 பௌண்ட்ரி மற்றும் 2 சிக்ஸர்களை அவர் விளாசினார். தொடர்ந்து வந்த அஸ்மதுல்லா 16, மக்ஸ்வெல் 0, ஸ்ரொய்னிஸ் 20 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தனர்.

7ஆவது ஷஷாங் சிங் களத்துக்கு வந்தார். ஸ்ரேயாஸூடன் 81 ஓட்டங்கள் இணைப்பாட்டம் அமைத்தார் அவர். இருவரும் இறுதிவரை ஆட்டமிழக்கமால் இருந்தனர். ஸ்ரேயாஸ் 42 பந்துகளில் 97 ஓட்டங்களை விளாசினார். 5 பௌண்ட்ரி மற்றும் 9 சிக்ஸர்களை அவர் விளாசினார். ஷஷாங் 16 பந்துகளில் 44 ஓட்டங்கள் எடுத்தார். 6 பௌண்ட்ரி மற்றும் 2 சிக்ஸர்களை அவர் விளாசினார்.

மொத்தமாக இந்த இன்னிங்ஸில் 16 சிக்ஸர்களை பறக்கவிட்டிருந்தது பஞ்சாப் கிங்ஸ் அணி. குஜராத் அணியில் தமிழகத்தை சேர்ந்த சாய் கிஷோர் மட்டுமே 4 ஓவர்களில் 30 ஓட்டங்கள் கொடுத்து 3 விக்கெட்களை வீழ்த்தியிருந்தார். மற்ற பந்துவீச்சாளர்கள் அனைவரும் ஓவருக்கு 10 ஓட்டங்களுக்கு மேல் கொடுத்திருந்தனர்.

244 என்ற இலக்குடன் இறங்கிய குஜராத் அணிக்கு



சாய் சுதர்சன், /ப்மன் கில் தொடக்கம் கொடுத்தனர். சாய் சுதர்சன் 41 பந்துகளில் 74 ஓட்டங்களை விளாசி அசத்தினார். எதிர்முனையில் ஆடிய கில், 33 ஓட்டங்களில் வெளியேறினார்.

அடுத்து இறங்கிய ஜோஸ் பட்லர் அரைச்சதம் (54) விளாசி தெறிக்க விட்டார். ஷெர்ஃபேன் ருதர்போர்ட் 46 ஓட்டங்கள் எடுத்தார். இப்படியாக அசத்தலாக சென்று கொண்டிருந்த ஆட்டம், அடுத்து தடுமாறத் தொடங்கியது. ராகுல் 6, ஷாருக்கான் 6, அர்ஷத் கான்1 என இலக்கை விரட்ட முடியாமல் 20 ஓவர்களில் 232 ஓட்டங்களுடன் சுருண்டது குஜராத் அணி. இதனால், பஞ்சாப் அணி 11 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. (ஐ)



## உலகக் கிண்ணத்துக்கு ஆர்ஜென்ரீனா தகுதி!

புவனஸ்அயர்ஸ், மார்ச் 27

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள பிபா உதைபந்தாட்ட உலகக் கிண்ணத் தொடருக்கு ஆர்ஜெரீனா அணி தகுதி பெற்றுள்ளது.

செவ்வாய்க்கிழமை நடந்த உருகுவே அணியுடனான ஆட்டத்தை பொலிவியா 0-0 என சமன் செய்த காரணத்தால் ஆர்ஜென்ரீனா உலகக் கிண்ணத்துக்குத் தகுதி பெற்றது. எனினும், தகுதி சுற்றில் பிரேசில் அணியை 4-1 என்ற கோல் கணக்கில் ஆர்ஜென்ரீனா வென்றது.


ஜூலியன் அல்வாரெஸ், என்ஸோ பெர்னாண்டஸ், அலெக்சிஸ் மேக் அலிஸ்டர், கியுலியானோ ஆகியோர் ஆர்ஜென்ரீனாவுக்காக கோல் பதிவு செய்தனர். ஆட்டம் தொடங்கியது முதலே ஆர்ஜென்ரீனா ஆதிக்கம் செலுத்தியது.

ஆறாவது நிமிடத்தில் ஜூலியன் அல்வாரெஸ் முதல் கோலை பதிவு செய்தார். 12ஆவது நிமிடத்தில் பெர்னாண்டஸ் தன் அணிக்காக இரண்டாவது கோலை பதிவு செய்தார்.

பிரேசில் அணி 26ஆவது நிமிடத்தில் கோல் பதிவு செய்தது. இருப்பினும் 37 மற்றும் 71ஆவது நிமிடங்களில் மேலும் இரண்டு கோல்களை ஆர்ஜென்ரீனா பதிவு செய்தது. இந்த ஆட்டத்தில் ஆர்ஜென்ரீன வீரர்களின் செயல்பாடு அபாரமாக இருந்தது.

தென்னமெரிக்க உதைபந்தாட்ட கூட்டமைப்பு அணிகளுக்கான தகுதி சுற்று போட்டியில் தற்போது ஆர்ஜென்ரீனா அணி மட்டுமே உலகக் கிண்ணத்துக்கு தகுதி பெற்றுள்ளது.

2026 உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடர் கனடா, மெக்சிகோ மற்றும் அமெரிக்காவில் நடைபெறவுள்ளது. மொத்தம் 48 அணிகள் இதில் பங்கேற்கவுள்ளன. (ஐ)



## மக்ஸ்வெல் படைத்த மோசமான சாதனை!

அகமதாபாத், மார்ச் 27

ஐ. பி. எல். வரலாற்றில் அதிகமுறை டக்-அவுட் ஆன வீரர் என்ற மோசமான சாதனையை பஞ்சாப் அணியின் மக்ஸ்வெல் படைத்துள்ளார்.

குஜராத் ரைட்டன் - பஞ்சாப் கிங்ஸ் அணிகள் நேற்றுமுன்தினம் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய பஞ்சாப் அணி 20 ஓவர்களில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 243 ஓட்டங்களை குவித்தது. இதில், 11ஆவது ஓவரில் களமிறங்கிய மக்ஸ்வெல் டக் - அவுட் ஆனார்.

இது மக்ஸ்வெல்லின் 19ஆவது முறையாக டக் அவுட்டாக அமைந்தது. இதனால், ஐ.பி.எல். வரலாற்றில் அதிக முறை டக் அவுட்டான வீரர் என்ற மோசமான சாதனையை அவர் படைத்தார்.

## இரட்டை சதமடித்து சாருஜன் சாதனை!

கொழும்பு, மார்ச் 27

இலங்கையின் 19 வயதுக்கு உட்பட்டோர் அணியின் துடுப்பாட்ட வீரரான சண்முகநாதன் சாருஜன் இரட்டை சதமடித்து சாதனை புரிந்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற சென். பீற்றர்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் சென். பெனடிக்ட் அணி தலைவரான சண்முகநாதன் சாருஜன் 202 ஓட்டங்களை எடுத்தார்.

கொட்டாஞ்சேனையில் சென். பெனடிக்ட் மைதானத்தில் இடம்பெற்று வரும் இந்தப் போட்டியில் நேற்றுமுன்தினம் சாருஜன் 183 பந்துகளில் 202 ஓட்டங்களை பெற்று ஆட்டமிழக்காமலிருந்தார்,

இதில் இவர் 17 பௌண்ட்ரிகளையும் 8 சிக்ஸர்களையும் அடித்தார்.சென். பெனடிக்ட் அணி 7 விக்கெட்களை இழந்து, 410 ஓட்டங்களை பெற்றிருந்த நிலையில் தனது இன்னிங்ஸை நிறுத்திக் கொண்டது.

இந்த பாடசாலை சுற்று முழுவதும் சென். பெனடிக்ட் அணி சிறப்பாக விளையாடாமல் தடுமாறி வரும் நிலையில் சாருஜனின் இந்த துடுப்பாட்டம் அணியின் நிலையை மாற்றுவதில் மிக முக்கியமானதாக அமைந்துள்ளது. (ஐ)



## 99சதவீத முடிவுகளை ருதுராஜே எடுக்கிறார்

### டோனி தெரிவிப்பு




சென்னை, மார்ச் 27

நடப்பு ஐ. பி. எல். தொடரில் முதல் போட்டியில் மும்பையை வென்று வெற்றிக் கணக்கை தொடங்கியது சென்னை சுப்பர் கிங்ஸ் அணி. இந்த நிலையில், அணித் தலைவராக 99 சதவீத முடிவுகளை ருதுராஜ் தன்னிச்சையாக எடுக்கிறார் என்று டோனி பேட்டி ஒன்றில் கூறியுள்ளார்.

அதில் அவர், “99 சதவீத முடிவுகளை ருதுராஜ்தான் எடுக்கிறார். களத்தடுப்பு, பந்துவீச்சாளர்கள் மாற்றம் என என அனைத்து முடிவுகளும் அவருடையது. தலைமை பண்பு அவரின் இயல்பில் உள்ளது. எனது பங்கு எதுவும் அதில் இல்லை” என்று டோனி கூறியுள்ளார்.

இந்தப் பேட்டியில் தற்போதைய ரி-20 கிரிக்கெட் துடுப்பாட்ட பாணி முற்றிலும் மாறியுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார். 2008 உடன் ஒப்பிடுகையில் தற்போது அது முற்றிலும் மாறியுள்ளது. உள்ளூர் மொழிகளில் போட்டிகளை வர்ணனை செய்வது வரவேற்கத் தக்கது.

43 வயதான டோனிக்கு இது 18ஆவது ஐ. பி. எல். தொடர். கடந்த 2023 வரையில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியை அவர் வழிநடத்தி வந்தார். தற்போது, அந்த அணியில் விக்கெட்காப்பாளர், துடுப்பாட்ட வீரராக விளையாடி வருகிறார். 2024ஆம் ஆண்டு தொடர் முதல் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியை ருதுராஜ் வழிநடத்தி வருகிறார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியாவை...

கொண்டு வந்தது. இந்தியா எங்கள் நட்பு நாடு. அவர்கள் எதற்கும் எங்களுக்கு உதவத் தயாராக உள்ளனர். இந்த ஆதரவை பற்றிக் கொள்வதே எங்களின் ஒரே தீர்வு. முதலீட்டை முன்னுரிமையாகக் கொண்டு இலங்கை முன்னேற இதுவே ஒரே வழி.

"இந்தியாவை நாம் நிராகரித்தால், நாம் ஒருபோதும் வளர்ச்சி அடையமாட்டோம். எந்த அரசாங்கம் ஆட்சியில் இருந்தாலும் முன்னேற இந்தப் பாதையைப் பயன்படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டும்" - என்றார். (ஐ)

## ஏப்.3 முதல்...

நா. பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

மேலும், எதிர்வரும் ஏப்ரல் 3ஆம் திகதி வங்காள விரிகுடாவில் அந்தமான் தீவுகளின் போட்பிளேயருக்கு அண்மையாக காற்றழுத்த தாழ்வுநிலை உருவாக வாய்ப்புள்ளது. வங்காள விரிகுடாவில் உருவாகும் காற்றழுத்த தாழ்வு மையம் எதிர்வரும் 5ஆம் திகதியளவில் தாழமுக்கமாக வலுப்பெற்று மேற்கு, வடமேற்கு திசை நோக்கி நகரும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், இதன் நகர்வு பாதை மற்றும் கரையை கடக்கும் இடம் பற்றி அடுத்த சில நாட்களின் பின்னரே உறுதிப்படுத்த முடியும்.

இந்தத் தாழமுக்கம் காரணமாக எதிர்வரும் ஏப்ரல் 3ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் மிதமானது முதல் கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. சிறுபோக நெற் செய்கைக்கான ஆரம்ப நடவடிக்கைகளில் ஈடுபடும் விவசாயிகள் இதனை கருத்தில் கொண்டு செயல்படுவது சிறந்தது.

இதேவேளை எதிர்வரும் ஏப்ரல் 5ஆம் திகதி முதல் 09ஆம் திகதி வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் கடற்பகுதிகள் கொந்தளிப்பான நிலையில் காணப்படும் என்பதனால் மீனவர்கள் கடலுக்கு செல்வதை தவிர்ப்பது சிறந்தது - என்றும் அவர் கூறியுள்ளார். (ஐ)

## பிரிட்டனின்...

உயர்ஸ்தானிகர் ஆண்ட்ரூ பேட்ரிக் கிடம் நேற்று வெளியிட்டார்.

வெளிவிவகார அமைச்சர் மேலும் குறிப்பிடுகையில், "பிரிட்டனின் வெளிவிவகார பொதுநலவாய அபிவிருத்தி அமைச்சு இலங்கையின் உள்நாட்டு போரின்போது இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல் துஷ்பிரயோகங்களுக்கான பிரிட்டனின் தடைகள் என வெளியிட்ட செய்திக்குறிப்பை வெளிவிவகார அமைச்சு கருத்தில்கொண்டுள்ளது.

பிரிட்டன் அரசாங்கம் நால்வருக்கு எதிராக தடைகளை விதித்துள்ளது. இவர்களில் மூவர் இலங்கையின் முன்னாள் இராணுவ தளபதிகள். மனித உரிமை கள் மீறலுக்கு காரணமானவர்கள் தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிக்கப்பட மாட்டார்கள் என்ற அர்ப்பணிப்பு என வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பையும் நாங்கள் கவனத்தில் எடுத்துள்ளோம்.

இந்த அடிப்படையில் இது குறிப்பிட்ட தனிநபர்களின் சொத்துகளை முடக்குதல், போக்குவரத்து தடை ஆகியவற்றை உள்ளடக்கிய பிரிட்டனின் ஒரு தலைப்பட்சமான நடவடிக்கை என நாங்கள் வலியுறுத்த விரும்புகிறோம். இவ்வாறான ஒருதலைப்பட்சமான நடவடிக்கைகள் பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதற்கு உதவாது. மாறாக, இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை குழப்பமானதாக்கும்.

பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான பொறிமுறைகளை வலுப்படுத்தும் நடவடிக்கைகளில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. கடந்த காலத்தின் எந்த மனித உரிமைகள் மீறலும் உள்நாட்டு பொறுப்புக்கூறும் பொறிமுறை ஊடாகவே கையாளப்பட வேண்டும் - என்றும் கூறினார். (ஐ)

## திஸ்ஸ...

பேராசிரியர் ஹினிதும சுனில் செனவி தெரிவித்துள்ளார்.

நுவரெலியாவில் நேற்று முன்தினம் செய்தியாளர்களின் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "யாழ்ப்பாணம் (தையிட்டி) திஸ்ஸ விகாரை பற்றி நிறைய செய்திகள் இருந்தாலும் அந்த விகாரை தொடர்பான தகவல்களும் எங்கள் தலையீடுகளும் நீண்ட காலமாக நடந்து வருகின்றன. ஓர் அரசாங்கமாக, திஸ்ஸ விகாரை தொடர்பான பிரச்னையில் தேவையான - நேர்மையான தலையீட்டை நாங்கள் எடுத்துள்ளோம். பாராளுமன்றத்திலும் தெளிவாகக் கருத்துகளை வெளியிட்டுள்ளோம்.

திஸ்ஸ விகாரை தொடர்பில் அந்தப் பகுதி மக்கள் எங்களைச் சந்தித்தனர். அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரனும் எங்களை சந்தித்தார். அவர்களுடன் நாங்கள் சுமுகமான கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளோம்.

சிலர் இந்தப் பிரச்னையை ஒரு பிரச்னையாக எழுப்பி மத நல்லிணக்கத்துக்குத் தீங்கு விளைவிப்பதாக தெரிகிறது. அந்தக் குழு மத நல்லிணக்கத்தை அழிப்பதன் மூலம் இந்த அரசாங்கத்தை பற்றி தவறான கருத்தை உருவாக்க முயற்சிக்கிறது.

உண்மையாகவே இந்தப் பிரச்னையை தீர்க்க நாங்கள் தலையிட்டோம். 30 ஆண்டு காலப் போருக்குப் பிறகு எழும் இதுபோன்ற பிரச்னைகளுக்கு மிகவும் உணர்திறன் வாய்ந்த பதிலை வழங்குவது ஓர் அரசாங்கமாக நமது பொறுப்பாகும். மேலும் இந்தப் பிரச்னையை நாங்கள் எவ்வாறு தீர்ப்போம் என்பதை பொறுத்திருந்து பார்க்க முழு நாட்டையும் அழைக்கிறோம்", என்றார். (ஐ)

## இழுவைமடி...

வவுனியாவில் நேற்றையதினம் பேச்சு நடத்தினர். இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

மேலும், இந்தப் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என்ற அடிப்படையில் இந்த பேச்சு இருந்தது. சுமுகமாக நடைபெற ஏற்பாடு செய்த இலங்கை மீனவர் சமாசத்துக்கு நெஞ்சார்ந்த நன்றிகள்.

கடந்த 9 வருடங்களுக்கு முன் இரண்டு அரசாங்கங்களும் பேசிய பின்னர், மீனவர் பிரச்னை பேசப்படவில்லை. இந்த 9 வருடங்களில் இரண்டு நாட்டு மீனவர்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இந்த பாதிப்பை எவ்வாறு நிறுத்துவது என்று பேசப்பட்டது. அவர்களின் கோரிக்கை இந்திய இழுவைமடி மீன்பிடி முற்றாக நிறுத்தப்பட வேண்டும். அதனை நிறுத்தினால் கடல்வளம் பாதுகாக்கப்படும் என்று கோரிக்கை முன்வைத்துள்ளார்கள்.

நாங்கள் இந்த இழுவைமடி மீன்பிடியை படிப்படியாக குறைப்ப தற்கு இந்திய மற்றும் தமிழக அரசாங்கம் ஊடாக சம்மதிக்கிறோம் எனக் கூறினோம். அடுத்த கட்டமாக ஏனைய மாவட்ட மீனவ அமைப்புகளையும் ஒன்றுதிரட்டி இந்திய அரசு, தமிழக அரசு, இலங்கை அரசாங்கம் உதவியுடன் இதனைப் பேசி நல்லதொரு தீர்வை அடுத்த கட்டமாக எட்ட முடியும் என பேசியுள்ளோம்.

வயிற்றுப் பிழைப்புக்காக மீன் பிடிக்கும் மீனவர்களை இலங்கை அரசாங்கம் தமது சட்டத்தின்படி 6 மாதம், ஒரு வருடம், 2 வருடம் என சிறை வைத்துள்ளது. அந்த மீனவர்கள் மனிதாபிமான முறையில் விடுவிக்கப்பட வேண்டும். இந்தப் பிரச்னைக்கு நிரந்தரமாகவும் தீர்வு காண வேண்டும் என கோரியுள்ளோம்.

அடுத்த கட்ட பேச்சின்போது அதனை செய்யலாம் என இலங்கை மீனவர்கள் கூறியுள்ளார்கள். நிச்சயமாக இலங்கை, இந்திய அரசாங்கங்கள் பேசி இதற்கு ஒரு தீர்வை எட்ட வேண்டும் - என்றார். (ஐ)

## 16-17...

பணியகத்தின் ஆலோசகர் மருத்துவர் டாக்டர் சிராந்திகா விதானகே தெரிவித்துள்ளார்.

மேலும், 11.9 சதவீத பிள்ளைகள் கவலை காரணமாக உறங்க முடிய வில்லை என்றும், 7.5 வீதத்தினருக்கு 2016 முதல் நெருங்கிய நண்பர்கள் இல்லை.

தற்கொலை எண்ணம், திட்டமிடல் மற்றும் முயற்சிகள் குறிப்பிடத்தக்க சமூகப் பிரச்னைகளாகவே உள்ளன. குறிப்பாக பெண்களில் 15.4 வீதமான பிள்ளைகள் தற்கொலை எண்ணங்களை கொண்டுள்ளனர். 9.6 வீதத்தினர் தற்கொலை திட்டங்களைத் தீட்டியுள்ளது டன், 9.1 வீதத்தினர் தற்கொலைக்கு முயற்சிக்கின்றனர்.

தற்போது பிள்ளைகள் டிஜிற்றல் சூழல்களில் அதிகமாக மூழ்கிவிட்டதால், 2016 முதல் இந்தப் பிரச்னைகள் நீடித்து வருவதை தரவு எடுத்துக்காட்டு கிறது. 21.9 வீத ஆண்கள் இன்னும் கொடுமைப் படுத்தப்படுவதாக முறையிடப்பட்டாலும் ஒட்டுமொத்தமாக கொடுமைப் படுத்துதல் குறைந்துள்ளது. கடந்த 12 மாதங்களில், வயது மற்றும் பாலினத்தின் அடிப்படையில், பெண் களை விட 5.4 வீதத்துக்கும் அதிகமான ஆண்கள் இணையவழி மிரட்டலை (cyber bullying) அனுபவித்துள்ளனர் - என்றார்.

## போரின்போது...

திங்கட்கிழமை தடை விதித்தது. இது தொடர்பில் மகிந்த ராஜபக்ஷ விடுத்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

விடுதலை புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் மனித உரிமைகள் மீறபட்டன என்ற நிரூபிக்கப்படாத குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் முப்படைகளின் முன்னாள் பிரதானி சவேந்திர சில்வா முன்னாள் இராணுவ தளபதி ஜகத் ஜெயசூரிய, முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரன்னகொட ஆகியோருக்கு எதிராக போக்குவரத்து தடை, சொத்து முடக்கம் உட்பட தடைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

2002 யுத்த நிறுத்த உடன்படிக்கை காணப்பட்டபோதிலும் 2002 பெப்ரவரி முதல் செப்ரெம்பர் 2005 வரையான காலப்பகுதியில் தமிழீழ விடுதலை புலிகள் 363 கொலைகளில் ஈடுபட்டனர்.

2005 நவம்பரில் நான் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட முதல் வாரங்களில் விடுதலை புலிகளின் தாக்குதல்கள் தீவிரமடைந்தன. இவற்றில் மிகவும் பாரதூரமான சம்பவங்களாக டிசெம்பர் 4ஆம், 6ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற கிளைமோர் தாக்குதல்களை குறிப்பிடலாம். 2006 ஜனவரி 5ஆம் திகதி கடற்படை கலத்தின்மீது இடம்பெற்ற தாக்குதலையும் 2006 ஏப்ரல் மாதம் இராணுவ தலைமையகத்துக்குள் இராணுவ தளபதியை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதலையும் குறிப்பிடலாம்.

இவற்றுக்கு அப்பாலும் எனது அரசாங்கம் 2006 ஜனவரி, ஜூன் மாதங்களில் ஜெனிவாவிலும் ஒஸ்லோவிலும் விடுதலை புலிகளுடன் இரண்டு சுற்று பேச்சுகளில் ஈடுபட்டது. எனினும், தமிழீழ விடுதலை புலிகள் அமைப்பு அந்தப் பேச்சுகளில் இருந்து ஒருதலைப் பட்சமாக வெளியேறியது.

2006 ஜூலையில் மாவிலாறு அணைக்கட்டை விடுதலைப் புலிகள் மூடி திருகோணமலை மாவட்ட விவசாயிகளுக்கான நீர் விநியோகத்தை தடுத்ததைத் தொடர்ந்து யுத்தம் மீண்டும் ஆரம்பமானது. 2009 மே மாதம் விடுதலை புலிகள் முற்றாக தோற்கடிக்கப்படும் வரை யுத்தத்தை நிறுத்த வில்லை.

இராணுவநடவடிக்கைகளின்போது பரந்துபட்டளவில் மனித உரிமைகள் மீறல் இடம்பெற்றன என்று பிரிட்டன் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகளை நான் நிராகரிக்கின்றேன் - என்றுள்ளது. (ஐ)

## வேட்புமனு...

வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு யாழ்ப்பாணத்தில் 9, கிளிநொச்சியில் 1, வன்னியில் 1 என 11 வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டன. இது தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளரும் சட்டத்தரணியுமான நிசாம் காரியப்பர் வாதாடவுள்ளார்.

இதேபோன்று, கண்டி மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தி கூட்டமைப்பின் சார்பில் தாக்கல் செய்யப்பட வேட்பு மனுக்களில் 9 வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டன. இதற்கு எதிராகவும் அந்தக் கட்சி உயர்நீதிமன்றில் வழக்குத் தொடுத்துள்ளது.

சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் 2 வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் அந்தக் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம், பொதுச் செயலாளர் நிஷாம் காரியப்பர் ஆகியோர் சட்டத்தரணிகளாக வாதாடவுள்ளனர்.

## அறிந்த...

தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

புலனாய்வுத்துறை ஊடாக அரசாங்கம், மத அடிப்படைவாதத்தைப் பரப்பும் குழுக்கள் தொடர்பில் ஆராய்ந்து அது குறித்த தகவல்களை பாராளுமன்றிலும் பாராளுமன்றத்துக்கு வெளியிலும் வெளிப்படுத்தியது. உரிய நேரத்தில் அவ்வாறானவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் அல்லது தேசிய பாதுகாப்பு தொடர்பில் முக்கிய தகவல்களை அறிந்திருந்தால் அவை தொடர்பில் புலனாய்வு பிரிவுக்கு அறிவிக்க வேண்டியது ஞானசார தேரரின் கடமையாகும். விசாரணைகள் ஜனாதிபதியால் முன்னெடுக்கப்படு பவை அல்ல. அவை பொலிஸ் மற்றும் புலனாய்வு பிரிவாலேயே முன்னெடுக்கப்படும்.

ஞானசார தேரருக்கு புலனாய்வு பிரிவில் உள்ளவர்கள் யார் என்பது தெரியும். அந்த வகையில் தன்னிடமுள்ள தகவல்கள் தொடர்பில் அவரால் நேரடியாக புலனாய்வு பிரிவுக்கு தெரி விக்க முடியும். வழங்கப்படும் தகவல் களை அடிப்படையாகக் கொண்டு புலனாய்வுப் பிரிவு விசாரணைகளை முன்னெடுக்கும் - என்றார். (ஐ)

## மீனவர்...

பேசினர். இதைத் தொடர்ந்து நடந்த ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு,

2016ஆம் ஆண்டு புதுடில்லியில் நடைபெற்ற இலங்கை இந்திய வெளிவிவகார அமைச்சு மட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் இன்றுவரை நடைமுறைப்படுத்தப்படாமையால் தமிழ்நாட்டிலும் வடக்கு மாகாணத்திலும் மீனவர்கள் பாதிக்கப்படுகிறார்கள்.

இரு நாட்டிலும் பாதிக்கப்படுவது மீனவர்களே. எனவே, இதனைத் தீர்க்கவேண்டிய அவசியத்தையும் அதற்கான பொறிமுறைகள் தொடர்பாகவும் கலந்துரையாடியுள்ளோம்.

இதன் அடுத்தகட்டமாக இலங்கையின் கடற்றொழில் அமைச்சரும் அதிகாரிகளும் அதேபோன்று இந்திய பிரதமர் மற்றும் தமிழ்நாடு முதலமைச்சர் ஆகியோர் இந்த பிரச்னையை அரசமட்ட பேச்சாகக் கொண்டுசென்று அதனூடாக மீனவர் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு எட்டப்படவேண்டும் என்பதை இரு அரசாங்கங்களிடமும் கேட்டுக் கொள்கிறோம் - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## கச்சதீவு வழக்கு விசாரணைக்காக திகதியிட்ட இந்திய உச்சநீதிமன்றம்

சென்னை, மார்ச் 27

கச்சதீவு தொடர்பாக இந்தியா- இலங்கை இடையே மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கின் இறுதி விசாரணைக்காக எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு வழக்கை பட்டியலிட இந்திய உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

மேலும், இந்த வழக்கில் மனுதாரரான முன்னாள் முதல்வர் மு.கருணாநிதிக்கு பதிலாக தி.மு.க மூத்த தலைவர் டி.ஆர். பாலுவை சேர்க்கவும் உச்சநீதிமன்றம் அனுமதி அளித்ததுள்ளதாக இந்திய செய்திகள் தெரிவித்தன.

கச்சதீவை இலங்கையிடம் ஒப்படைக்கும் வகையில் இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையே மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களுக்கு எதிராக இந்திய உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது.

கச்சதீவை மீட்கக் கோரி அதிமுக பொதுச் செயலராக இருந்த மறைந்த ஜெயலலிதா, ஏ.கே. செல்வராஜ் உள்ளிட்டோர் சார்பிலும் உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது.

இந்த வழக்கு தலைமை நீதிபதி சஞ்சீவ் கன்னா, நீதிபதிகள் சஞ்சய் குமார், கே.வி. விஸ்வநாதன் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது.

அப்போது, மனுதாரரான முன்னாள் முதல்வர் கருணாநிதி தரப்பில் மூத்த சட்டத்தரணி பி.வில்சன் ஆஜராகி, "கச்சதீவை இலங்கைக்கு ஒப்படைக்க 1974, ஜூன் 26 மற்றும் 28 ஆகிய திகதிகளில் செய்யப்பட்ட ஒப்பந்தங்களும், மார்ச் 23, 1976 அன்று செய்யப்பட்ட மற்றொரு ஒப்பந்தமும் அரசமைப்புச் சட்டத்துக்கு எதிரானது மற்றும் இந்த ஒப்பந்தங்கள் கேள்விக்குரியவை"- என்றார். (அ)

## ஜோன்ஸ்டனுக்கு எதிரான வழக்கு விசாரணைத் திகதி ஒத்திவைப்பு

கொழும்பு, மார்ச் 27

வர்த்தக அமைச்சராக இருந்த காலத்தில் இலங்கை சதொச ஊழியர்களை அவர்களின் உத்தியோகபூர்வ கடமைகளிலிருந்து நீக்கி அரசியல் நடவடிக்கையில் ஈடுபடுத்திய குற்றத்துக்காக முன்னாள் வர்த்தக அமைசசர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்ட மூவருக்கு எதிராக கையூட்டல் மற்றும் ஊழல் ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று கொழும்பு உயர் நீதிமன்றத்தில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. கொழும்பு உயர் நீதிமன்றத்தின் நீதிபதி நவரட்ண மாரசிங்க முன்னிலையில் ,இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது குறித்த வழக்கு தொடர்பான ஆதாரங்கள் நீதிமன்றத்தில் சமர்க்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து குறித்த வழக்கு தொடர்பான விசாரணைகள் எதிர்வரும் ஜூன் மாதம் 23 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன

சதொச ஊழியர்களை அவர்களின் உத்தியோகபூர்வ கடமைகளிலிருந்து நீக்கி அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தியதன் மூலம் அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்படுத்திய குற்றச்சாட்டில் முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, சதோச நிறுவனத்தின் முன்னாள் தலைவர் எராஜ் பெர்னாண்டோ மற்றும் அவரது ஒருங்கிணைப்புச் செயலாளர்களில் ஒருவரான மொஹமட் சாகீர் ஆகியோருக்கு எதிராக கையூட்டல் மற்றும் ஊழல் ஆணைக்குழுவினால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## சுகாதார உத்தியோகத்தர்களின் சம்பள முரண்பாட்டை நீக்குக!

சுகாதார தொழில் வல்லுநர்கள் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 27

சுகாதார உத்தியோகத்தர்களின் சம்பள முரண்பாட்டை நீக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என நிறைவுகாண் சுகாதார தொழில் வல்லுநர்கள் சங்கத்தின் இணைப்பாளர் ரவி குமுதேஷ் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் உள்ள சுகாதார உத்தியோகத்தர்கள் சம்மேளனத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பான சுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ளது. எனினும் சம்பள முரண்பாடு நீக்கப்படவில்லை.-என்றார். (அ)

# அரசாங்க ஊழியருக்கு ஏப்ரல் 10 சம்பள உயர்வு

அமைச்சரவைப் பேச்சாளர் தகவல்

கொழும்பு, மார்ச் 27

எதிர்வரும் ஏப்ரல் 10 ஆம் திகதி அரச ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்பை வழங்க முடியும் என அமைச்சரவைப் பேச்சாளர், அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்றது. இதன்போது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-வரவு-செலவுத் திட்டம் பாராளுமன்றத்தில் கடந்த 21 ஆம் திகதி நிறைவேற்றப்பட்டது. அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு குறித்த சுற்றறிக்கை மார்ச் மாதம் 24 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது.



அதற்கு மறுநாளான நேற்றைய தினம் பொது நிர்வாக அமைச்சின் ஊடாக அரச நிறுவனங்களுக்கு சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி சம்பளம் வழங்கப்படும். ஆகையால் இன்னும் 15 நாட்கள் காணப்படுகின்றன. அவ்வந்த நிறுவனங் களைச் சேர்ந்த சம்பளம் தயாரிக்கும் பொறுப் புமிக்க அதிகாரிகள் அதனை உரிய வகையில் செய்ய வேண்டும். அரசாங்கம் என்ற வகையில் அதற் கான அனைத்து ஏற்பாடுகளையும் நாம் செய்துள்ளோம் - என்றார். (அ)

## யாழ்ப்பாணத்து மக்களே போரை மறந்துவிட்டனர்!

பிரிட்டனின் நோக்கம்தான் என்ன என கேட்கிறார் சாகர காரியவசம்

கொழும்பு, மார்ச் 27



"யாழ்ப்பாணத்து மக்களே போரை மறந்து சிங்கள தலை வர்கள் உள்ள அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ள சூழ்நிலையில், படையினரை இலக்கு வைத்து பிரிட்டன் தடைகளை விதிப்பதன் நோக்க என்ன, இதன் பின்னணியில் செயற்படுவது யார்?".

-இவ்வாறு பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் கேள்வி எழுப்பியுள்ளார்.

போலியான போர்க்குற்றச்சாட்டுகளை முன்வைத்து படையினருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுப்பதற்கு மகிந்த ராஜபக்ஷ ஆட்சி காலத்தில் இடமளிக்கப்படவில்லை எனவும், தற்போது அதற்குரிய முயற்சி எடுக்கப்படுகின்றதா என்ற சந்தேகம் எழுவதாகவும் அவர் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன கட்சி தலைமையகத்தல் நேற்று முன் தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது, இது தொடர்பில் மொட்டுக் கட்சிச் செயலாளர் சாகர காரியவசம் மேலும் கூறியவை வருமாறு- மூன்று படைத்தளபதிகள் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் உட்பட இலங்கையர்கள் நால்வருக்கு பிரிட்டனால் தடைகள் விதிக்கப்பட்டுள்ளன.

சிவில் போரின்போது மனித உரிமைகள் அப்பட்டமாக மீறப்பட்டன, சட்டத்துக்கு புறம்பான படுகொலைகள் மற்றும் பாலியல் வன்கொடுமைகள் உள்ளிட்ட காரணங்களுக்காகவே இத்தடை விதிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

புலிகள்தான் உலகில் உள்ள பயங்கரமான பயங்கரவாத அமைப்பாகும். இப்படிபட்ட ஒரு அமைப் புடன் போரிட்டு வெற்றிபெறுவதற்கு பங்க ளிப்பு செய்த படையினர் குறிவைக்கப் பட்டுள்ளனர்.

போர் முடிவடைந்து 15 வருடங்கள் கடந்துள்ளன. யாழ்ப்பாணத்து மக்களே போரை மறந்து, சிங்கள தலைவர்கள் உள்ள அரசாங்கத்தக்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளனர்.

இப்படியான சூழ்நிலையில் மீண்டும் இப்படியொரு சம்பவம் இடம்பெறுவது ஏன்? இதன் பின்னணியில் இருப்பவர்கள், ஒத்துழைப்பு வழங்குபவர்கள் யார் என்ற பிரச்னையும் எமக்கு உள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் அரசாங்கத்தின் உறுதியான நிலைப்பாட்டை பிரிட்டனுக்கும், சர்வதேசத்தக்கும் ஜனாதிபதி வழங்கவேண்டும்.

மகிந்த ராஜபக்ஷ ஆட்சிகாலத்தில் படையினருக்கு எதிராக போலியாக போர்க்குற்றச்சாட்டுகளை சுமத்தி அவர்களுக்கு சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு இடமளிக்கப்படவில்லை. தற்போது அதற்குரிய முயற்சி மீண்டும் இடம்பெறுகின்றதா என்ற சந்தேகம் எழுகின்றது.

போரை முடிவுக்கு கொண்டுவந்து நாட்டில் சமாதானத்தை நிலைநாட்டிய படையினருக்காக நாம் என்றும் முன்னிற்போம் - என்றார். (அ)

## தேசபந்துவுக்கு எதிரான பிரேரணை ஏப்ரல் 8,9 ஆம் திகதி பாராளுமன்றில்!

கொழும்பு, மார்ச் 27

பதவி இடைநிறுத்தப்பட்டு சிறையில் இருக்கும் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை பதவி நீக்கம் செய்வதற்கான பிரேரணை ஏப்ரல் 8 அல்லது 9 ஆம் திகதி பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் கூறினார்.

இடைநீக்கம் செய்யப்பட்ட பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை அப்பதவியிலிருந்து நீக்குவதற்கான விசாரணைக் குழுவொன்றை நியமிப்பது தொடர்பான பிரேரணை முன்வைப்பதற்கான தீர்மானம் சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவிடம் நேற்று முன் தினம் கையளிக்கப்பட்டது.

இதில் 115 பாராளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்டுள்ளனர்.2002ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க அலுவலர்களை அகற்றுதல் (நடவடிக்கைமுறை) சட்டத்தின் 5ஆவது பிரிவுக்கு அமைய இந்தத் தீர்மானம் சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

பிரதியமைச்சர்களான மஹிந்த ஜயசிங்க, எரங்க குணசேகர, பாராளுமன்ற உறுப்பினர்களான (கலாநிதி) கௌசல்யா ஆரியரத்ன மற்றும் உபுல் அபேவிக்ரம ஆகியோர் இந்தப் பிரேரணையை சபாநாயகரிடம் கையளித்தனர். (அ)

## இம்முறையும் தமிழர் எமக்குப் பேராதரவு!

### ரில்வின் சில்வா நம்பிக்கை

கொழும்பு, மார்ச் 27

வடக்கு-கிழக்கு மக்களின் மனநிலை மாறாது. உள்ளூராட்சிசபைத் தேர்தலிலும் தேசிய மக்கள் சக்தியையே அவர்கள் ஆதரிப்பார்கள் என்று ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் இதனை தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கில் தேசிய மக்கள் சக்தியால் வெற்றி பெற முடியுமா என எழுப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அவர் மேலும் கூறியவை வருமாறு-பொதுத்தேர்தலின்போது 22 தேர்தல் மாவட்டங்களில் 21 இல் நாம் வெற்றி பெற்றோம். மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரமே முதலிடத்தை பிடிக்க முடியாமல்போனது. யாழ்.மாவட்டம் உட்பட வடக்கில் வெற்றி பெற்றோம்.

கடந்த பொதுத் தேர்தலின்போது எமக்கு வாக்களித்துவிட்டு, இம்முறை மக்கள் வாக்களிக்காமல் இருப்பதற்கு எவ்வித காரணமும் இல்லை.

மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றி வருகின்றோம். எனவே, பொதுத்தேர்தலின்போது எமக்கு வாக்களிக்காதவர்கள்கூட இம்முறை வழங்குவார்கள். சிறப்பான அணியை களமிறக்கியுள்ளோம்.

கடந்த காலங்களில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அனைத்து சபைகளுக்கும் நாம் போட்டியிடமுடியாத சூழ்நிலை காணப்பட்டது. இம்முறை அனைத்து சபைகளுக்கும் போட்டியிடுகின்றோம். இதுகூட ஆரம்ப கட்ட வெற்றியே - என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 27.03.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org